காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

21-8-66

விலை 20 காசு



முகப்புக் கதை:

பெரிய மனிதன்

வேதா

"அண்ணே..."

அழைப்பொலி கேட்டு வெளிவந்தது ஆண்பாலில்லை, பெண்பால்.

"அண்ணன் இல்லையா?"

குமரேசனின் தீனமான கேள்வி, உள்ளிருந்து வந்த சுந்தரியின் முகத்தைச் சிணுங்க வைத்தது.

"விடிந்ததும், விடியாததுமாக வந்தாயிற்று? தரித்திரம்..."

வெறுப்பின் மிகுதியில் சுந்தரியின் மனம் கசந்து நிறைகிறது. ஆனால் அதன் வண்ணம் முகத்தில் இறங்காமல், சாதுரியமாக மறைத்து உபசாரம் பேசுகிறது உதடு.

"அண்ணனா? ... ஏதோ முக்கியமான வேலையாக இருக்கிறார் போலிருக்கே?"

கம்பிப் பாகாய் இனிமையாக இழுத்துக் கூறிவிட்டு, மெள்ள நழுவிவிட்டாள் சுந்தரி உட்புறமாக. பேச்சை நீடிப்பது நல்லதில்லை என்பது அவள் எண்ணம்.

"இருக்கட்டும். வரட்டும். அவசரம் ஒன்றுமில்லை." என்றபடி முன்கூடத்து பெஞ்சிமீது உட்கார்ந்துவிட்டான் குமரேசன்.

பாவம். சுந்தரியின் பேச்சுக்கு உட்பொருள் தெரிந்தால் தானே அவனுக்கு! யதார்த்தமாகத்தான் புரிந்துகொண்டான்.

"போய்விடமாட்டானா"...என்ற நைப்பாசை தீய்ந்த, புகைச்சலுடன் உள்ளே வந்த சுந்தரி, புத்தகம் படித்துக் கொண்டிருந்த கணவர் எதிரே வந்து நின்றாள் சதிர் பொம்மைபோல.

"உங்கள் அருமைத் தம்பி வந்திருக்கிறார்."

"யார் குமரேசனா?" கவனத்தைப் புத்தகத்திலிருந்து மீட்டவாறு வினவினார் பரமசிவம்.

"உம். ஆமாம்."

அந்த குரலில் வழிந்த ஏளனமும், அதிருப்தியும், மனைவியைக் கூர்ந்து நோக்க வைத்தது அவரை.

"என்னவாம்?"

"என்ன, பிச்சைக்கு வந்திருப்பார்..."

"அவன் காதிலே படப் போகிறது."

"படட்டுமே. நீங்கள்தான் பயந்து, பயந்து வாரி விடுகிறீர்கள்! ......

"சரி. சரி."

அடங்கிய குரலில் அவர் அடக்கவும், எரிச்சல் மேலிட வெடித்தாள் சுந்தரி.

"இங்கே பாருங்கள். கொடுத்தது போதும்; இனி ஒரு காசு கொடுத்தீர்களோ, நான் "ரொம்பப் பொல்லாதவளாக இருப்பேன். ஆமாம், தெரிந்து கொள்ளுங்கள் ......"

"இப்போ என்ன கொள்ளை போய்விட்டதாம் புலம்ப?"

"போனது போதாதா? கொடுத்ததைக் கேட்டு வாங்குங்கள் முதலில். அப்புறம் பரிந்து பேசலாம், தம்பிக்கு."

"என்னமோ பாவம் சிரமதிசை; ஒரு வேலையில் அமர்ந்துவிட்டானால் கொஞ்சம், கொஞ்சமாக வேனும் கொடுக்கமாட்டானா?"

"போதுமே உங்கள் கரிசனமும், நீங்களும். இரக்கம் பார்த்தால் இறங்க வேண்டியதுதான் பள்ளத்தில்."

"என்ன என்கிறாய் இப்போ?"

"ஒன்றுமில்லை. பழைய பாக்கியில் பத்து ரூபாயாவது நெருக்கி வாங்குங்கள். கொஞ்சம் கடுமை காட்டினால்தான் பணம் திரும்பும். இல்லையோ முழுக்குப்போட வேண்டியதுதான்..."

"அவன் கையிலே இருந்தால் கேட்க வருவானா?"

"எல்லாம் இருக்கும்; இல்லாமலா பெண்டாட்டிக்குப் புதுப் புடவை வாங்கிப் போர்த்தியிருக்கிறார்? உங்களிடம் அழுது கொண்டே இருந்தால்தானே பாக்கியைக் கேட்கமாட்டீர்கள் நீங்கள். அதற்குப் போடுகிற நாடகம்தான் இது; தெரியாதா என்ன?"

மனைவியின் 'தர்ம' வாக்கியம் தம்பியின்பால் இளகியிருந்த மனத்தைக் கல்லாக்க, மூளைவிட்ட சினத்துடன் முன்புறம் போனார் பரமசிவம். சோற்றுக்கே தாளம் போடுகிறபோது புடவை என்ன புடவை?

சோர்ந்து உட்கார்ந்திருந்த தம்பியின் இளைத்த உரு; அவர் நெஞ்சை உருக வைப்பதற்கு மாறாக, இறுகவே வைத்தது. மகராசியின் தூண்டுகோல் செய்த வேலை அது!...

பணமில்லை, பணமில்லை என்று புதுப் புடவை வாங்கி இருக்கிறானே பெண்டாட்டிக்கு. அதில் ஐந்தோ, பத்தோ கடனுக்கு என்று தருவதற்கென்ன; ஐயோ பாவம் வேலை போய் தம்பியின் குடும்பம் தவிக்கிறதே என்று இரங்கி உதவினதற்கு இதுதான் பலனா? உம்?...

உள்ளம் உறுமிற்று. உணவைப்போல், உடையும் மனிதனின் வாழ்க்கைக்கு அத்தியாவசியத் தேவைதான் என்பதை அவரால் உணரமுடியாமற் போனது ஏனோ. ஆத்திரம் அறிவை விழுங்கிவிட்டது போலும்......உணர்வின் எதிரொலியாய் சீறிற்று சொற்கள்.

"என்னடா? எங்கே வந்தாய்? காலை வேளையில்? பணத்திற்கா?"

திகைத்துத் தடுமாறிவிட்டான் குமரேசன். எடுத்த எடுப்பிலேயே தணல் மாரியாய் வார்த்தைகளைப் பொழியும், தமையனாரின் வெடுவெடுத்த முகத்தைப் பார்த்து. என்ன கோபம் அவருக்கு? பாசமும், இரக்கமுமாய் நடந்துகொள்வதற்கு மாறாக ஏனிப்படி வெடுவெடுக்கிறார்? அடிக்கடி பணம் கேட்பது தொந்தரவாக இருக்கிறதோ.

"உம்...இல்லை ... ஆமா ... வந்து தங்கராசுவுக்கு பீஸ் கட்டணும். இன்றுதான் கடைசி நாளாம். எங்கும் பணம் புரளவில்லை அண்ணே, அதுதான் வந்தேன். ஒரு பத்து ரூபாய் கொடுத்தாயானால்..."

"உம்..."

கத்தரித்தாற்போல் நின்றுவிட்டது குமரேசனின்பேச்சு, இடையே கேட்டகர்ச்சனையால். நிலைஉயரத்து உடல் கூசிக் குறுக, தவித்தான் மேலே பேச்சு எழாமல்.

"முன்பே ஏகமாக் கொடுத்திருக்கிறேன்." அண்ணன் தொடங்கவும் தம்பி ஒட்டித் தொடர்ந்தான் பேச்சை.

"ஆமாம் என்ன செய்வதண்ணா! வேலை ஒன்று ஆகிவிட்டால் தேவ

(15-ம் பக்கம் பார்க்க)

அறிவுடைமை!

கருத்துக்களைச் சொல்வோர், யாராக இருப்பினும், சொல்லப்படும் கருத்தின் உண்மை நிலையை ஆராய்ந்து, உட்பொருள் காணும் திறனே அறிவுடைமையாகும்.

--திருவள்ளுவர்.

காஞ்சி

மலர் 3 21—8—66 இதழ் 4

நல்லரசு காண!

தமிழக மேலவையில், மாநில கவர்னர் **உஜ்ஜல் சிங்** அவர்கள் வள்ளுவப் பெருந்தகையின் திருஉருவப் படத்தினைத் திறந்துவைத்துள்ளார்.

ஏற்கனவே சட்டமன்றத்தில் வள்ளுவப் பெருந்தகையின் திருஉருவப் படம் எழிலும் ஏற்றமும் அளித்து வருகிறது.

தமிழர்கள், இந்தியாவின் பிறபகுதியினர், ஆட்சியின் மாட்சிபற்றியும் அறநெறி குறித்தும் அறிவாற்றலும் அக்கறையும் காட்ட இயலாதிருந்த நாட்களிலேயே, கோனாட்சியினையே குடியாட்சிக்கு ஒப்பான தாக்கிய மாண்பினர்.

அறநூற்கள் பற்பல அவனியில் உள்ளன என்றபோதிலும் இன்ன சமயத்தினருக்கு மட்டுமே உரித்தானது என்றோ, இன்ன வகுப்பினருக்கு மட்டுமே ஏற்றது என்றோ கூறத்தக்க குறுகிய நிலையினைக் கடந்து, எங்கும் எவரும் ஏற்கத்தக்கனவற்றினை, எளிய, இனிய, முறையினிலே உள்ளடக்கிய பெருநூல், தமிழகம் கண்ட திருக்குறளாகும்.

திருக்குறளின் அருமையினை இன்று, பல்வேறு நாட்டினரும் உணர்ந்துள்ளனர். தமிழர், தமது உலகினரிடையே கூறிப் பெருமிதம் கொள்வதற்கு இன்று திருக்குறளே நிலைத்து நின்று வருகிறது.

அத்தகைய அறநூலை அளித்த அண்ணலின் திருஉருவப்படம், மேலவையில் இடம்பெற்றிருப்பது அறிந்து அகமிக மகிழ்கின்றோம்.

ஏற்புடையனவற்றினை உணர்ந்திடவும், எழுச்சி பெற்றிடவும், வள்ளுவர் வழிகாட்டி வருவார் என்று கவர்னர் கூறியது மிகப் பொருத்தமானதேயாகும்.

வெளி அரசின் பிடியினின்றும் விடுபட்டுள்ளோம் இதுபோது; நடைபெற்று வருவது நமது அரசு; இது நல் அரசாக அமைந்தால் மட்டுமே, 'விடுபட்டோம்' என்பதன் முழுப்பொருளைப்பெற்றவராவோம். பழைய தளைகளுக்குப் பதில் புதிய தளைகள் என்ற நிலை இருந்திடுமேல், 'விடுதலையும் கெடுதலையும்' ஒன்றேயாகும்.

நல்லரசு கண்டிட நாம் மேற்கொள்ள வேண்டியன யாவை என்பதனையும்,

நாடு வளம்பெற, மக்கள் நல்வாழ்வுப் பெற்றிட அரசு எம்முறையில் செயல்பட வேண்டும் என்பதனையும்,

அரசுக்கும் மக்களுக்கும், நம் நாட்டுக்கும் உலகுக்கும் எத்தகைய நல்லுறவு இருந்திட வேண்டும் என்பதனையும்,

அரசு அறநெறி நின்றிட யாது செயல் வேண்டும் என்பதனையும்,

வள்ளுவர் தமது குறளில் விளக்கியுள்ளார்.

அன்பும் அறமும் வலியுறுத்திய வள்ளுவர், அறிவுத் தெளிவினையே எல்லாவற்றினுக்கும் அடிப்படையாக்கிக் காட்டியுள்ளார்.

அறிந்ததெல்லாம் அறிவு ஆகிவிடாது என்பதனையும், கூறப்படுவனவற்றுளெல்லாம், மெய்ப்பொருள் எது எனக் கண்டறிதலே அறிவு என்பதனையும் வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

எவருடைய கருத்தையும் அச்சம் காரணமாகக் கண்மூடி வாய்பொத்தி ஏற்றுக்கொள்வதையோ, எவருடைய கருத்தையும் அவர் நிலைகண்டு அலட்சியப் படுத்துவதையோ, வள்ளுவர் விரும்பவில்லை.

"யார், யார் வாய்கேட்பினும்"—என்கிறார்.

குடியாட்சிக்காக அமைந்தவை சட்டமன்றங்கள்.

ஆங்கு, யார், யார் வாய் கேட்பினும், அதிலே உள்ள மெய்ப்பொருளைக் கண்டிடும் அறிவு ஆட்சி செயல்வேண்டும்.

எண்ணிக்கை வலிவினை மட்டுமே நம்பி இருந்துவிடாமல், கூறப்படுவனவற்றிலே காணக்கிடைக்கும் நல்லனவற்றை ஏற்றுக்கொள்ளும் திண்மை பெற்றிட வேண்டும்.

எண்ணிக்கை வலிவற்ற எதிர்க்கட்சியினர் கூறுவனவற்றை நாம் கேட்டிடத் தேவையில்லை, என்ற மமதை ஆள்வோரிடம் தலை தூக்கும்போதெல்லாம், வள்ளுவரின் திருஉருவப் படத்தை ஒருகணம் உற்று நோக்குவரேல், அவர்தம் உளம் சுடும். மெய்ப்பொருள் காண்பதனையல்லவா அறிவு என்று அண்ணல் கூறியுள்ளார், நாம் அவ்வழி நடந்திடுகின்றோமா, இல்லையே என்றுணர்ந்து திருந்த முற்படுவர்.

'இடிப்பார்' இல்லாத அரசு கெடும்; கெடுப்பாரில்லாதுகெடும்' என்று கூறிய வள்ளுவரின் திருஉருவப் படம், ஆட்சியினருக்கு மக்களாட்சி முறையின் மாண்பினை உணர்த்துவிக்கும் என்று நம்புகின்றோம்.

மேலவையில் இதுபோது அணிசெய்கின்ற வள்ளுவரின் திருஉருவப் படத்தினை அன்பளிப்பாக வழங்கியவர், நமதன்பரும், காஞ்சிபுரம் நகராட்சிமன்றத் தலைவராக வீற்றிருப்பவரும், முன்பு மேலவை உறுப்பினராகத் திகழ்ந்தவருமான **அ. க. தங்கவேலர்.** அவர் எதற்கும், வள்ளுவரை நாடித் தெளிவு பெற்றுக் கொள்ளும் இயல்பினர். வள்ளுவர் நெறியினில் நாடு நின்றிடின், அல்லல் அகலும், வளம் மிகும், மாண்பு மிளிரும் என்பதில் தளாரா நம்பிக்கைகொண்டவர். மக்களாட்சி மன்றங்களில் குறள்நெறி கடைபிடிக்கப் படவேண்டும் என்ற நோக்குடனேயே அவர்கள் மேலவைக்கு வள்ளிவரின் திருஉருவப்படத்தை அளித்துள்ளார்கள் என்று எண்ணுகின்றோம்.

மேலவை உறுப்பினராக வீற்றிருந்த காலை அ. க. தங்கவேலர், அச்சமற்று தமது கருத்துக்களை எடுத்தளித்திருக்கின்றார்; தமது கருத்துக்களுக்கு வலிவும் பொலிவும் தந்திட திருக்குறளைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளார்.

வினைத்தூய்மை பற்றியும் வினைத்திட்பம் குறித்தும் அவர்கள் மேலவையில் எடுத்துக் கூறியபோதெல்

லாம், எதிர்க்கட்சியினர் என்ற நினைப்புடன் அல்ல, வள்ளுவரின் நெறியினை நம்புபவர் என்ற முறையிலேயே பேசியிருக்கின்றார்.

மேலவையில் சிறப்பான பணியாற்றி, அனைவருடைய பாராட்டுதலையும் பெற்ற அ. க. தங்கவேலர், அந்த அவைக்கு வள்ளுவரின் திருஉருவப்படத்தை வழங்கி இருப்பது, நாடு வாழ்ந்திட, மக்கள் ஏற்றம் பெற்றிட, அரசு நல்லரசு ஆகிட, இதோ வள்ளுவர் வழிகாட்டியுள்ளார், அதனை மேற்கொள்க என்று கூறிடுவதற்கு ஒப்பாகும். வளர்க வள்ளுவர் நெறி! வெல்க குறள் அறம்!! ○

செல்லாக் காசுகள்

செல்லாக் காசினை எவரும் ஏற்றிடமாட்டார்கள் --இது பொது உண்மை.

ஆனால் செல்லாக் காசுகளை ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல, அவைகளுக்கு ஆதிக்கம்கூட அளித்து விடுவது, இந்தப் பொது உண்மைக்கு ஒரு விலக்கு.

அந்த விலக்கு, இன்று காங்கிரஸ் கட்சியிலே வளர்ந்து பேருருவம் பெற்றிருப்பதைக் காணலாம்.

நாணயம் (பணம்) பற்றிய விளக்க நூலிலே ஒரு இலக்கணம் காட்டப்பட்டிருக்கிறது.

கெட்ட நாணயம், நல்ல நாணயத்தைத் துரத்தி விடும் என்பது அந்த இலக்கணம்.

ஒருவரிடம் கெட்ட நாணயம்--செல்லாத நாணயம்-- சிலவும், நல்ல நாணயம் சிலவும் இருந்தால், இவர் முதலில் கெட்ட நாணயத்தைத் தான் உபயோகிக்க முயற்சிப்பார். இதிலே அவர் வெற்றி பெற்றிடின், அந்த செல்லாத காசினைப் பெற்றவர், அதனை வேறு எவரிடமாவது தள்ளிவிடப் பர்ப்பாார், அவர் மற்றவரிடம் கொடுத்துவிட முயற்சிப்பார், இப்படியே நடந்து, செல்லாத நாணயம் புழங்கிக் கொண்டிருக்கும், நல்ல நாணயம் மறைவாகிப் போய்விடும் என்பது அந்தப் பொருளாதார இலக்கணத்தின் பொருள்.

அபித்அலி என்பவர் பழையகாங்கிரஸ்காரர்;இந்தியப் பேரரசில் அமைச்சராக இருந்தவர்; தொழிலாளர் இயக்க ஈடுபாடு மிக்கவர்; இப்போதும் பாராளுமன்ற உறுப்பினராகத் திகழ்பவர்.

ஆகவே அவருடைய கருத்துக்கு, பொருமை பொச்சரிப்பு போன்ற இடித்துரைகளை இணைத்துவிடுவது முடியாது.

அந்த அபித்அலிதான் கூறுகின்றார், காங்கிரஸ் கட்சிக்குள் கெட்ட நாணயங்கள் புகுந்துவிட்டன; நல்ல நாணயங்கள் புழக்கத்திலிருந்து மறைந்து கொண்டு வருகின்றன என்று.

சுதந்திரத்தின் சோபிதம் பற்றிச் சொக்கிடும் வேளை அல்லவா இந்நாட்கள்; இந்த நாட்களாகப் பார்த்து அபித்அலி அவர்கள் இந்த ‘கெட்ட நாணயம்’ குறித்து கவனப்படுத்தி வைக்கின்றார்.

காற்றடித்த பக்கம் திரும்புபவர்கள்
அகப்பட்டதைச் சுருட்டுபவர்கள்
சுயநலச் சூதாட்டக்காரர்கள்

போன்றார், காங்கிரஸ்கட்சியிலே மிகப் பெரிய அளவு புகுந்துவிட்டார்கள்; கெட்ட நாணயம் நல்ல நாணயத்தை மூலைக்குத் துரத்தி விடுவது போல, இத்தப் புதியவர்கள், உண்மையான காங்கிரஸ்காரர்களை மூலைக்குத் துரத்திவிட்டுள்ளனர் என்று மனம் வெதும்புகின்றார்--முன்னாள் அமைச்சர்.

விடுதலை வீரர்களின் அணி வகுப்பு நடாத்திய கூட்டத்திலே பேசிய அபித்அலி அவர்கள், காங்கிரஸ் கட்சியிலே உள்ள இந்த வெறுக்கத் தக்க நிலையினைக் கண்டித்திருப்பதுடன், இந்த நிலை நீடிக்கவிடுவோமானால், மக்களின் நம்பிக்கையை இழந்துவிடுவோம் என்று எச்சரித்துமுள்ளார்.

தியாகிகளின் முகாமாக இருந்துவந்த காங்கிரஸ் இன்றையத் தினம், பர்மிட்டுக்காகவும் லைசென்சுக்காகவும், பகற் கொள்ளையை மறைத்துக் கொள்ளவும் பதுக்கலைப் பாதுகாப்புடன் நடத்தவும், முற்படும் தன்னலக்காரர்களின் தங்குமிடம் ஆகிவிட்டது என்று நாம் கூறும்போது, ஆத்திரம் பொங்கி வழிகிறது; அபித்அலிபோன்ற உண்மைக் காங்கிரஸ்காரர்களுக்கு அல்ல; அவர்கள் மனம் வெதும்பி சிற்சில நேரத்தில் உண்மையை வெளிப்படையாகவே எடுத்துக்காட்டுகின்றனர்; கடுங்கோபம் பீறிட்டுக் கிளம்புவது, காங்கிரஸ் போர்வையின் கீழ் சுயநல வேட்டையாடக் கிளம்பியுள்ளோருக்குத்தான்.

ஒவ்வொரு மாநிலத்திலும் இதுபோது, விரல் விட்டு எண்ணக்கூடிய சில சீலர்கள் தவிர, காங்கிரஸ் கட்சியிலே இடம்பெற்றுத் தலைவர்களாகி உள்ளவர்களிலே மிகப்பலர், யார்? ஜாலியன்வாலா படுகொலை

(14-ம் பக்கம் பார்க்க)

“காஞ்சி”
இரண்டாம்
ஆண்டு மலர்

அண்ணாவின்
பொன்னோவியங்கள்
பலவோடு

முன்னணியினர் பலரும் எழுதும்
கதை, கட்டுரை, கவிதை, நாடகம்
முதலானவைகளுடன்
படக்கதை, துணுக்குகள் சேர்ந்து

கருத்துப் பேழையாய்
செப்டம்பர் திங்கள் முதல் வாரத்தில்
வெளிவருகிறது.

விலை ரூ. 1-00தான்!

விற்பனையாளர்கள் தேவையான பிரதிகளுக்கு முன்பணத்துடன் 27-8-66க்குள் எழுத வேண்டுகிறோம்.

தம்பி

அனுபவி ராஜா!

முந்திரா என்ற முதலாளி நடத்திய திருவிளையாடல் இந்தியப் பேரரசையே ஒரு முறை தக்குமுக்காடச் செய்துவிட்டதுபற்றி மறந்திருக்கமாட்டாய்.

அப்படியாராகிலும் மறந்துவிட்டிருப்பினும், இப்போது வெகு வேகமாகப் பேச்சாளராகிவருகிறாரே திருச்செந்தூர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவரைப் பார்த்ததும் அல்லது அவரைப்பற்றிய நினைவு வந்ததும், முந்திராபற்றிய முழக்கவனமும் வந்துவிடும்.

முந்திரா, மிகப்பெரிய மோசடிகளைச் செய்து கோடி கோடியாகப் பணத்தைக் குவித்துக்கொண்டிருந்தபோது-குட்டு உடைபடாதிருந்தபோது—அவனுக்குப் புகழ்கூட இருந்தது! வியாபாரத்தில் சூரன்! புள்ளிபோடுவதில் புலி! தொழில் அமைப்பதில் நிபுணன் என்றெல்லாம் பாராட்டக்கூடச் செய்தனர்.

வணிக உலகிலே ஒரு புதிய ஒளி நட்சத்திரம் என்று சிந்து பாடிடக்கூட ஆட்கள் கிளம்பினர்.

அவன் மண்ணைத் தொட்டால் அது பொன்னாகும்! அவன் ஜாதகப்பலன் அப்படிப் பட்டது! யோகம் அப்படிப்பட்டது! என்று பேசினர் பலர். எப்போதோ கேட்ட பாட்டு நினைவிற்கு வருகிறது

ஆண்டவன் படைச்சான் எங்கிட்ட கொடுத்தான்
அனுபவி! ராஜான்னு அனுப்பி வைச்சான்!

அதுபோல ',ராஜா'வாகத்தான் முந்திரா அனுபவித்துக்கொண்டிருந்தான் — மோசடி வெளியே வெடித்துககொண்டு கிளம்பும் வரையில்.

சிக்கிக்கொண்டான், சிறை சென்றான்; ஆனால் அவன் குவித்திருந்த செல்வம்? இருக்கிறது!

அந்தச் செல்வத்தைப்பற்றி இப்போது ஒரு புதுத்தகவல் கிடைத்து புதிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

முந்தரா, சேர்த்த பணத்தில் பெரும் பகுதியை, பல இலட்சக்கணக்கான பவுன்களை, தன் மனைவி பெயரால் இலண்டனில் பாங்கியில் போட்டு வைத்திருப்பதாக ஒரு தகவல் கிளம்பி, அதுபற்றிய துப்பு விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள.

இலண்டன் பாங்கியில் ஒரு வெள்ளைக்காரன் பெயரால் இலட்சக்கணக்கான பவுன் போடப்பட்டிருக்கிறது; ஆனால் உண்மையில அந்தப் பணம் அவனுடையது அல்ல; அவன் திருமதி. முந்திராவுக்காக, அவர்களின் ஏஜண்டாக அந்தப் பணத்தை பரிபாலித்து வருகிறான் என்ற விவரம் கிடைத்திருக்கிறது. வழக்கப்படி புலன் விசாரிததுக்கொண்டு வருகிறார்கள.

நான் தம்பி! இதைச் சொல்லுவதற்குக் காரணம், முந்திரா பற்றிய புதுத் தகவலின் முழு விவரம் தெரிந்துகொள்ள வேணடும் என்பதற்காக அல்ல.



பொதுத்துறை சிலவே போதுமா தம்பி!

தனிப்பட்டவர்கள் தொழில் நடத்த சர்க்கார் அனுமதிக்கும்போது, பணம் குவித்திட என்னென்ன விதமான புரட்டுகள் நடைபெறக்கூடும் என்பதைக் காட்டிடவே இதனைக் கூறினேன்.

சர்க்கார் பணத்தையும், நம்பிக் கொடுத்தவர்களின் பணத்தையும், ஒன்றைப் போட்டு ஒன்றை இழுத்தும், இதைக் காட்டி அதை வாங்கியும், இப்படிப் பல செப்படி வித்தைகளைச் செய்ய முடிந்தது முந்திராவால்; அதன காரணமாக பல தொழில்களுக்கு அதிபதியாக முடிந்தது; பல வழிகளிலே பணம் கிடைத்தபடி இருந்தது; பணம், பணத்தை இழுத்துக்கொண்டு வந்து சேர்த்தது.

இப்படி ஒரே ஆசாமியிடம் பல தொழில்கள் சிக்கிக்கொண்டால், பல தொழில்கள் மூலம் கிடைக்கும் வருவாய் அவ்வளவும் ஒரே ஆசாமியிடம் போய்ச் சேர்ந்தால், அவன் கோடீஸ்வரன் ஆவது மட்டுமல்லாமல், மற்றவர்களின் வாழ்க்கை வரண்டு போகத்தானே செய்யும்.

இந்த நிலையை அனுமதித்துவிட்டுப் பிறகு, சோஷியலிசம் பேசுவதினால் என்ன பயன்?

முந்திராபோல மோசடி செய்யாமலேயேகூட, சட்டப்படி கிடைத்திடும் சலுகைகளைக் கொண்டேகூட, முதலாளிகள் பணத்தை மேலும் மேலும் குவித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இன்றைய காங்கிரஸ் அரசினால் அளிக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்டவர்கள் இதுபோலப் பல தொழில்களைச் செய்து பணம் குவித்துக்கொள்ளும் முறையை அமெரிக்காவில், முதலாளித்துவ முறை என்கிறார்கள் அதனையே இங்கு காங்கிரஸ் அரசு, ஜனநாயக சோஷியலிசம் என்று பெயரிட்டிருக்கிறது.

சர்க்கார், பொதுத் துறையிலே சில தொழில்களை நடத்துவதைக்கொண்டே இங்கு சோஷியலிசம் இருப்பதாகக் கூறிக்கொள்வது தவறான வாதம்; சொத்தையான தத்துவம்.

பணம், ஒரு சிலரிடம் போய்க் குவிந்துகொள்வதற்கான வழியை அமைத்துக் கொடுத்துவிட்டு சோஷியலிசம் பேசுவது, கன்றுக்குட்டி இறந்த பிறகு, வைக்கோலால் செய்த உருவத்தின்மீது அதன் தோலைப் போர்த்தி வைத்து, அதைக் காட்டி பசுவை ஏய்த்துப் பால் கறந்திடும் தந்திரம் போன்றதாகும்.

எத்தர்கள், புரட்டர்கள் கிடக்கட்டும்; என்றேனும் ஓர் நாள் அவர்கள் பிடிபட்டுக் கொள்வார்கள்; ஆனால் தம்பி! சட்டத்திற்கு உட்பட்ட முறையிலேயே நடந்து பெரும் பொருளைத் திரட்டிக்கொள்ள இடம் இருக்கிறது. அப்படி ஒரு சிலரிடம் தொழில் சிக்கிக் கொள்வதால், உற்பத்தியாகும் செல்வம் அந்த ஒரு சிலரிடம் போய்ச் சேர்ந்துவிடுகிறது, பல இலட்சக் கணக்கானவர்கள் 'கூலி' மட்டும் பெற்று, குமுறிக் கிடக்கும் நிலையினராகின்றனர்; ஏழை பணக்காரன் வித்தியாசம் விரிவாகிக் கொண்டு வருகிறது.

காங்கிரசாட்சி ஏற்பட்ட பிறகு புதிய பணக்காரர்கள், புதிய புதிய தொழிலதிபர்கள் எவ்வளவு வேகமாக வளர்ந்துகொண்டு வருகிறார்கள் என்பதை மக்கள் அறியமாட்டார்களா!

முன்பெல்லாம் தம்பி! ஒரு குடும்பம் பணக்காரக் குடும்பமாக வேண்டுமானால், ஒரு தலைமுறை உழைத்து பணம் சேர்த்து, அடுத்த தலைமுறையில்தான், அந்தக் குடும்பம் பணக்காரக் குடும்பம் ஆகமுடியும். இருபது வருடமாக மண்டி வியாபாரம்; முப்பது வருடமாக நகை வியாபாரம்; பதினைந்து வருடமாக ஜவுளி வியாபாரம்; பாட்டனார் கால முதற்கொண்டு 'காண்ட்ராக்டு'த் தொழில்—இப்படித்தான் பணக்காரக் குடும்பங்கள் பற்றிய 'வரலாறு' இருக்கும்.

காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், பார்த்துக் கொண்டிருக்கும்போதே, பணக்காரர்கள் உண்டாகிவிடுகிறார்கள். ஆறு வருடத்திற்கு முன்பு மோடார் துடைத்தவன், ஆண்டவன் தயவாலே இப்போது அறுபது பஸ்ஸுக்குச் சொந்தக்காரன் என்கிறார்கள்!

ஏழு வருடத்திற்கு முன்னாலே எடுபிடி! ஏழுமலையான் தயவாலே இப்போது பத்து பங்களாவுக்குச் சொந்தக்காரன் என்கிறார்கள்.

இந்த வேகமான வளர்ச்சிக்குக் காரணம் என்ன? பணம், ஒரே ஒரு தொழிலிலே கிடைத்தது அல்ல; ஒரு தொழிலிலே கிடைத்த பணத்தைக் கொண்டு மற்றொரு புதிய தொழில், அதிலே கிடைத்ததைக் கொண்டு மற்றோர் தொழில், இப்படி குட்டி போடுகிறது! இதைக் காங்கிரஸ் அரசு அனுமதிக்கிறது.

ஒரு தொழிலில்,—பல சரக்கு மண்டி—ஜவுளிக் கடை — காண்ட்ராக்ட் — எதுவாகவேனும் இருக்கட்டும், அது சிறிய அளவிலே துவங்கி, பிறகு அது மெள்ள மெள்ளப் பெரிய அளவாகி, ஒரு இடத்தில் இருப்பது; பிறகு பல இடத்திலே கிளைகள் விட்டு எல்லாவற்றிலும் இருந்து வருவாய் கிடைத்து, மொத்தமாகப் பல இலட்சங்கள் சேருவது ஒரு முறை.

உதாரணமாக, கடைவீதி கோடியில் இருபது ரூபாய் வாடகைக் கட்டிடத்தில் ஜவுளிக் கடை ஆரம்பித்து, பிறகு அது வளர்ந்து, இருநூறு ரூபாய் வாடகையுள்ள புதிய பெரிய கட்டிடத்தில் கடை நடந்து, பிறகு கடைவிதியில் மையமான இடத்தில் புதிய கட்டிடமே சொந்தத்தில் அமைந்து, அதிலே பெரிய அளவிலே கடை நடத்தி, இலாபம் கூடுதலாகக் கிடைக்கக் கிடைக்க வேறு சில ஊர்களிலேயும் ஜவுளிக் கடைகளைத் துவக்கி, இலாபம் சேர்ப்பது ஒருமுறை.

அந்தவிதமாக மட்டும் இருந்தால்கூட, ஒரு சிலரிடம் இவ்வளவு வேகமாகப் பணம் சேராது.

முதலில் சிறிய அளவில் ஜவுளிக் கடை

பிறகு பெரிய அளவில் ஜவுளிக் கடை

பிறகு ஜவுளி தயாரிக்கும் ஆலை.

பிறகு ஆலைக்குத் தேவையான பருத்திக் காடு.

பல்வேறு பெயர்களில் பற்பல அமைப்புகள்!

பிறகு ஆலைக்குத் தேவையான இயந்திர உற்பத்தி.

பிறகு இயந்திரத்துக்குத் தேவையான இரும்புத் தொழில்.

பிறகு இவ்வளவுக்கும் தேவைப்படும் பணத்துக்காக பாங்க்;

இப்படி, பல கால்களை உண்டாக்கிக் கொள்வது ஒரு முறை.

நமது நாட்டில் இன்று வளர்ந்து, வலிவு ஏறியுள்ள முதலாளித்துவம், இந்த முறையானது. ஜவுளியிலிருந்து துவங்கி பாங்க் வரையில், பல்வேறு தொழில்களுக்கு ஒரே அதிபதி!

இதனைத்தான் பொருளாதார ஏகாதிபத்தியம் என்பர்.

இந்தியா, பர்மா, சிலோன், இப்படிப் பல நாடுகளுக்கு அதிபதியாக இருந்து, பிரிட்டன் ஏகாதிபத்தியத்தை பல நூற்றாண்டுகள் நடத்தியதால், உலக வல்லரசு ஆகவும், செல்வம் கொழிக்கும் இடமாகவும் இருந்துவந்தது.

பொருளாதாரத் துறையிலே இன்று வளர்ந்துவிட்டிருக்கும் ஏகாதிபத்தியம் அரசியல் துறை ஏகாதிபத்தியத்தைவிட ஆபத்தானது; நாட்டு வளத்தை ஒரு சிலர் உறிஞ்சிக் கொள்ளுவதால்.

யார்மீதும் பகை கொண்டோ, பொறாமை காரணமாகவோ, அருவருப்பு கொண்டோ, கூறவில்லை; விளக்கத்துக்காகக் கூறுகிறேன்; நான் குறிப்பிடும் பொருளாதார ஏகாதிபத்தியத்தை உணர்ந்துகொள்ள வேண்டுமானால், உதாரணத்துக்காக இந்த இருபது ஆண்டுகளில் டி. வி. எஸ். கம்பெனி வளர்ந்துள்ள வகையையும், பொள்ளாச்சி மகாலிங்கம் தமது தொழிலை விரிவாக்கியுள்ள வகையையும் பார்! நிலைமை புரியும்! பார்க்கச் சொல்லிக் கேட்டுக் கொள், கோபப்படும் காங்கிரஸ் நண்பரை; அவருக்கும் உண்மை உள்ளத்தைத் தைக்கும்.

பொள்ளாச்சி மகாலிங்கம், காங்கிரஸ்காரர்; சட்டமன்ற உறுப்பினர்; படித்தவர்; நல்லவர்; எனக்கு நண்பர்கூட.

அவர், காங்கிரஸ்கட்சி கூறும், சோஷியலிசத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஏன்? அந்த சோஷியலிசம்,

பஸ் தொழில்

சர்க்கரை ஆலைத்தொழில்

செயற்கை வைரத்தொழில்

என்ற முறையில் நண்பர் மகாலிங்கம் தமது தொழில் சாம்ராஜ்யத்தைப் பெரிதாக்கிக்கொண்டு, இப்போது சென்னையை அடுத்த கும்மிடிப்பூண்டியில், இரும்புக் குழாய் தயாரிக்கும் பெரிய தொழிற்சாலை அமைக்கும் அளவு, அனுமதித்திருக்கிறது. இந்த நிலையிலே, காங்கிரஸ் பேசும் சோஷியலிசத்தை ஏற்றுக்கொள்ள அவருக்குக் கசக்குமா?

சோஷியலிசம் என்றால், இலாபம்தரும் தொழில் பலவும் ஒரு சிலரிடம் போய்ச் சிக்கக் கூடாது, சிக்கிடின் ஏழை பணக்காரன் பேதம் அதிகமாகிவிடும், ஆகவே மகாலிங்கம் அவர்களே! பஸ்தொழிலோடு திருப்திப்படுங்கள்! புதிய புதிய தொழிலைத் துவக்கி, புதிய புதிய வருவாயைப் பெருக்கிக்கொண்டே போனால், செல்வம் பரவாது! என்று காங்கிரசின் சோஷியலிசம் கூறினால், மகாலிங்கம், இது அக்ரமம்! இது கொடுமை! என்று கோபித்துக்கொள்ளக்கூடும்.

எந்தத் தொழிலையும் நடத்தலாம், எவ்வளவு பெரிய தொழிலையும் நடத்தலாம், எந்த இடத்திலும் நடத்தலாம், எல்லாத் தொழிலிலும் கிடைக்கும் இலாபத்தை அடையலாம், ஆனால் ஜனநாயக சோஷியலிசத்தை மட்டும் பேசவேண்டும் என்றுதானே காங்கிரஸ் கட்சி கூறுகிறது. முதலாளிகள் ஏன் தலை அசைக்கமாட்டார்கள்! தாளமேபோடுகிறார்கள், இது அல்லவா கீதம் என்று!!

ஒரு முதலாளி, பல்வேறு தொழில்களை நடத்துவது மட்டுமல்ல; பல்வேறு பெயர்களில், பல அமைப்புகளை நடத்திக்கொள்ளவும் முடிகிறது.

ஒரு பத்துநாட்களாக, பத்திரிகைகளிலே பலமாக அடிபடுகிறதே தம்பி! **அமீர்சந்த் பியாரிலால்** கம்பெனி—அதன் கதை அப்படித்தான்.

பல (கம்பெனிகள்) அமைப்புகள்—தனித்தனிப் பெயருடன்; எல்லாவற்றிலும் இலாபம்; எல்லாம் ஒரே இடத்திற்குச் செல்ல வழி!

ஆண்டவனுக்கு ஆயிரம் நாமம்—அர்ச்சிக்க.

புதிய முதலாளிகளுக்கு பல கம்பெனிகள், தனித்தனிப் பெயருடன்—எல்லாம் இலாபம் பெற.

அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி என்ற ஒரே பெயரில் தொழிலை விரிவாக நடத்துவதைவிட, தனித்தனிப் பெயருடன் பல கம்பெனிகளை நடத்துவதிலே பல வசதிகள்; பல இலாபங்கள்; வரிச்சலுகைகள் கிடைக்கின்றன.

அமைச்சர் சுப்பிரமணியம் முதலிலே போட்ட ஒரு உத்திரவைப் பிறகு மாற்றினாரே, அது ஏன்? அது முறையா? என்ற கேள்வி கிளப்பிவிடும் சத்தத்தில், பொது மக்கள்—அதிலும் குறிப்பாக காங்கிரஸ் பேசிவரும் ஜனநாயக சோஷியலிசம் போலியானது என்பதை உணராதிருக்கும் பொதுமக்கள், ஒரு பேருண்மையை அறிந்துகொள்ள முடியாமலிருக்கிறார்கள்.

எத்தனைப் பெரிய அளவிலும், எத்தனை வடிவங்களுடனும் ஒரு முதலாளித்துவ அமைப்பு இருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுகிறது, இந்த அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி.

தம்பி! இந்தக் கம்பெனி 1910-ம் ஆண்டு துவக்கப்பட்டது. இன்று எஃகு வியாபாரத்தில் மட்டும் ஈடுபட்டுள்ள இதன் அமைப்புகளின் எண்ணிக்கை 20.

இந்த இருபதும், முதலாளிகளைக் கொழிக்க வைக்கவே ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்களே வெள்ளைக்கார அரசை—அப்போது ஏற்பட்டவை அல்ல. அப்போது, **அமீர்சந்த் பியாரிலால்** கம்பெனி மட்டுந்தான். மற்ற இருபது கம்பெனிகளும் காங்கிரஸ் ஆட்சியின்

அனுமதி பெற்று, அடிக்கிறார் கொள்ளை!

போது—1948-லிருந்து ஏற்பட்டவை. பொதுக்கணக்குக் குழுவினர் கண்டறிந்து வெளியிட்ட தகவலைத் தருகிறேன்—எந்தவிதமான முதலாளித்துவ அமைப்பு, சோஷியலிசம் பேசம் காங்கிரஸ் ஆட்சியின்போது வளர்ந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளச் சொல்லு தம்பி! பொங்கி எழுகின்ற காங்கிரஸ் நண்பர்களே.

		வருடம்
1.	அமீர்சந்த் பியாரிலால்	1910
2.	சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட்	1948
3.	சுரேந்திரா ஓவர்சீஸ் பிரைவேட் லிமிடெட்	1948
4.	அசோசியேடட் ஒயர்ஸ் கண்டக்டர்க்ஸ் கம்பெனி—	
5.	அபிஜே பிரைவேட் லிமிடெட்	1959
6.	அபிஜே கம்பெனி, கல்கத்தா	1962
7.	அபிஜே ஸ்டீல் காஸ்டிங், ஜலந்தர்—	தகவல் இல்லை
8.	ஸ்டீல் கிரீட் பிரைவேட் லிமிடெட்—	
9.	ஸ்டீல் ரோலிங்மில்ஸ், கல்கத்தா	1963
10.	காஷ்மீர் சிராமிக்ஸ்	1961
11.	ஓரியண்டல் ஸ்பூன்பைப் கம்பெனி	1961
12.	ஏரான் ஸ்டீஸ் ரோலிங் மில்ஸ், ஜலந்தர்	1957
13	ஏரான் ஸ்டீல் ரோலிங் மில்ஸ், பம்பாய்	தகவல் இல்லை
14.	இன்டர் நேஷனல் சானிடரி என்ஜினியர்ஸ் டில்லி	,,
15.	இந்தியா என்ஜினிரிங் ஒர்க்ஸ் கல்கத்தா	,,
16.	மெடல் இம்போர்ட் கல்கத்தா	,,
17.	அமீர் சந்த் பியாரிலால் லிமிடெட்	1963
18.	சுரேந்திரா என்ஜினியரிங் ஒர்க்ஸ்	1960
19.	அபிஜே பிரைவேட் லிமிடெட் கல்கத்தா	
20.	அமீன்சந்த் பியாரிலால் டின் கன்ட்டெயினர்லிமிடெட்	
21.	அபிஜே ஸ்டீல் ஒர்க்ஸ் ஜம்மு.	

டில்லி, பம்பாய், கல்கத்தா, ஜம்மு ஜலந்தர் இப்படிப் பல ஊர்களில்!

எஃகு ஆலை, குழாய் தயாரிப்புத் தொழில், வேலைப்பாடுள்ள மண்பாண்டத் தொழில், இப்படிப் பல வகை.

முதலாளியின் பெயரில், பொது மக்களிடம் பங்குகள் வாங்கி நடத்தப்படும் கம்பெனி, குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் பங்குத் தொகை வாங்கி நடத்தப்படும் கம்பெனி இப்படிப் பல முறை.

எல்லாவற்றிலும் கிடைக்கும் இலாபம், ஒரே இடத்திற்குப்போய்ச் சேருவதற்கான வாய்ப்பு.

இதை அனுமதித்துக் கொண்டு, சோஷியலிசம் பேசுவதிலே, பொருள் இருக்கிறதா? நேர்மை இருக்கிறதா? கேட்டால், கோபம் வருகிறதே!

இத்தனை தொழில் அமைப்புகள் என்றால், இத்தனை வருவாய்த் துறைகள் என்று பொருள். இத்தனை வருவாய்த் துறையும் ஒரே இடத்திற்கு என்றால், பணம் அங்கு குவிவதும், பிற இடங்கள் வரண்டு போவதும் இயல்புதானே. எப்படி இந்த நிலைமையை வைத்துக் கொண்டு ஏழை பணக்காரன் வித்தியாசத்தை ஒழிப்பது?

இத்தனைத் தனித் தனி அமைப்புகள், ஒரே முதலாளியிடம் இருப்பதிலே வேறொர் வசதி கிடைக்கிறது.

சர்க்காரிடம், பர்மிட் லைசென்சு, வியாபார ஒப்பந்தம், தரகு இவைகளைப் பெறும்போது, ஒவ்வொன்றின் பேராலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு அமைப்பு ஏதாவது தவறுநடத்தி அதுகண்டு பிடிக்கப்பட்டு, சர்க்காரின் கோபம் பாய்ந்தால் மற்ற அமைப்புகளின் பேரால், சர்க்காரிடம் சலுகைகளை பெற்றுக்கொள்ளலாம்.

விளக்கிட விளக்கிட வித விதமான ஆதாயம், இதன் பலனாகக் கிடைப்பது புரியும்.

சர்க்கார், இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தவே இல்லையா என்று கேட்கிறாய். கட்டுப்பாடு, கட்டுப்பாடு என்று பேசுகிறார்களே, இதன் பொருள் என்ன என்று அறிந்துகொள்ள ஆசைப்படுகிறாய்.

காங்கிரஸ் அரசு தொழில் நடத்தும் அனுமதியில், ஏற்றுமதி இறக்குமதி நடத்துவதற்கான அனுமதியில் கட்டுப்பாடு வைத்திருக்கிறது.

அதாவது, எம்மிடம் அனுமதி பெற்றவர்கள் மட்டுமே இன்ன உற்பத்தித் தொழிலில் ஈடுபடலாம் இன்ன சரக்கை ஏற்றுமதி செய்யலாம், இன்ன சரக்கை இறக்குமதி செய்யலாம் என்ற கட்டுப்பாட்டை சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் இன்ன அளவுக்கு மேல், இன்ன வகைகளுக்கு மேல், ஒருவர் தொழில் நடத்தி விரிவாக்கி முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தை அமைத்துக்கொள்ளக்கூடாது என்ற தடையோ, நிபந்தனையோ, கட்டுப்பாடோ இல்லை.

எம்மிடம் அனுமதி பெறுக!—என்கிறார்கள்! முதலாளிகள் ‘அனுமதி’யைப் பெற்றுக்கொள்கிறார்கள்!

அதுவேகூட அவர்களுக்கு இலாபமாக முடிகிறது.

அதே தொழிலில் பலர் ஈடுபட்டால், அந்தத் தொழில் மூலம் கிடைக்கும் இலாபம் பல பேர்களுக்குப் பங்கு போடப்பட்டு விடும்; ஒருவருக்கும் கொழுத்த இலாபம் கிடைக்காது.

சர்க்காரின் அனுமதியைப் பெற்றவர்கள் மட்டுமே உற்பத்தி செய்யலாம், ஏற்றுமதி இறக்குமதி நடத்தலாம் என்று இருப்பதால், அதற்கான சர்க்கார் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடிந்த ‘பாக்கியவான்கள்,’ மற்றவர்களுடைய போட்டித் தொல்லை இல்லாமல், இலாபம் முழுவதையும் அவர்களே பெற்றுக் கொள்கிறார்கள்.

அதாவது, தம்பி! பாட்டு ஒன்று குறிப்பிட்டேனே, அது போல, சர்க்கார் அனுபவி

தண்டனை பெற்றும் தளரவில்லையே, ஏன்?

ராஜா! என்று சிலரை அனுப்பி வைக்கிறார்கள்!!

சர்க்காரிடம் சட்டம் இருக்கிறது—சுமை சுமையாக!

போலீசும் பட்டாளமும் இருக்கிறது — பலம் பொருந்தியதாக!

ஆனால், அமீர் சந்த்களிடம் பணத் தோட்டம் இருக்கிறது. அதனுடைய பொலிவு இருக்கிறதே, மயக்கும்; வலிவு இருக்கிறதே, மிரட்டும்; சட்டமே வளையும்; சர்க்காரே மலைக்கும்.

முதலாளித்துவ அமைப்பு இவ்வளவு விரிவாகவும் விழுதுவிட்ட தன்மையிலும் வளர வளர, அதனை அடக்கிடும் ஆற்றலை சர்க்கார் மெள்ள மெள்ள ஆனால் நிச்சயமாக இழந்துகொண்டேதான் வரும்.

தவறுகள் செய்தால், விடமாட்டோம், தண்டிப்போம் என்கிறார்கள்.

தவறுகள் நடந்தன; கண்டனமும், தண்டனையும் தரப்பட்டது; ஆனால் அமீர்சந்த் பியாரிலால் அமைப்பு அவ்வளவையும் தாங்கிக்கொள்ள முடிந்தது; தகர்ந்து போய்விடவில்லை; மூல பலம் அப்படி அமைந்திருக்கிறது.

ஏற்றுமதி இறக்குமதித் துறையிலே ஈடுபட்ட கம்பெனிகள் தவறு செய்தால், சர்க்கார் அவைகளை 'கருப்புக் கோடிட்டு'த் தண்டிக்க முறை இருக்கிறது; அதாவது அந்தக் கம்பெனிகளுடன் சர்க்கார் எந்த வியாபார ஒப்பந்தமும் செய்து கொள்ளாது—ஒருவன் பலமுறை போக்கிரித்தனம் செய்தால், போலீஸ் அவன் பெயரைக் குறித்து வைத்துக் கொள்வதுபோல.

அதுபோலச் செய்தது சர்க்கார்—அமீர்சந்த் பியாரிலால்—அதன் கிளைகள்மீது. செய்து? சளைக்கவில்லை! அமீர்சந்த் பியாரிலாலின் சாம்ராஜ்யம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. எத்தனை முறை சர்க்காரின் 'தண்டனை' கிடைத்தது என்ற விவரம் வேண்டுமா, தம்பி!

1. அமீர்சந்த் பியாரிலால் அமைப்பின்மீது 4-8-54 முதல் 29-1-57 வரையில், வீட்டு அமைப்பு அமைச்சர் அவை நடவடிக்கை எடுத்திருந்தது. மறுபடியும், 31—7—63 முதல் 31-7-65 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கை இரும்பு எஃகு அமைச்சர் அவையினால் எடுக்கப்பட்டது.
2. சுரேந்திரா ஓவர்சீஸ் அமைப்பின்மீது 26-10-56 முதல் 29-1-57 வரை அந்த இரண்டு அமைச்சரகங்களுமே நடவடிக்கை எடுத்திருந்தன.

   மறுபடியும் அதே அமைப்பின்மீது 31-7-63 முதல் 31—7—65 வரையில் நடவடிக்கை.
3. சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட் என்ற அமைப்பின் மீது இரும்பு எஃகு அமைச்சரகம், 31-7-63 முதல் 31-7-65 வரையில் நடவடிக்கை எடுத்திருந்தது.
4. இன்டர்நேஷனல் சானிடரி என்ஜினியர்ஸ் என்ற அமைப்பின் மீது வீட்டமைப்பு அமைச்சரகம் 15—9—54 முதல் 29-1-57 வரை, நடவடிக்கை எடுத்திருந்தது.
5. இந்தியா என்ஜினியரிங் ஓர்க்ஸ் என்ற அமைப்பின்மீது 4-8-54 முதல் 29-1-57 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டது.
6. மெடல் இம்ப்போர்ட் கல்கத்தா என்ற அமைப்பின்மீது 31-7-63 முதல் 31-7-65 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டது.
7. அதுபோன்றே அபீஜே பிரைவேட் லிமிடெட் மீது.
8. அதுபோலவே அமீன்சந்த் பியாரிலால் டின்கன்டெயினர் எனும் அமைப்பின் மீது.

இத்தனை வகையான நடவடிக்கைகள்—முறை தவறாக நடந்ததற்காக — எடுக்கப்பட்டும், இந்தத் தொழில் அமைப்பு, இப்போதும், எப்போதும்போலவே வலிவுடன் நிற்கிறது. அமைச்சர் சுப்பிரமணியத்துக்குத் தலைவலியைத் தருகிற பிரச்சினை இந்தக் கம்பெனியுடன்தான் பிணைந்திருக்கிறது.

தம்பி! தனிப்பட்டவர்கள் தொழில் நடத்த அனுமதிப்போமே தவிர, ஏராளமாக இலாபம் குவித்துக் கொழுக்கவிடமாட்டோம் என்கிறார்கள், தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழிலில் தவறு நடந்தால், விடமாட்டோம் என்று வீரம் பேசுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள். மறுபடியும் ஒருதடவை, அமீர்சந்த் பியாரிலால் அமைப்புபற்றி நான் தந்துள்ள தகவல்களைப் படித்துப் பார்த்துவிட்டு பண்புகெடாத காங்கிரஸ்காரரிடம் படித்துக் காட்டி, அவரையே நியாயம் கூறச் சொல்லு: இதுவா சோஷியலிசம் கொண்டு வரும் இலட்சணம் என்பதுபற்றி.

அடக்கிவிடுவோம், ஒடுக்கிவிடுவோம் என்று வீரம் பேசுகிறார்கள் தம்பி! அதைக் கேட்டு உண்மையான காங்கிரஸ் பற்று கொண்டவர்கள் ஓரளவு மயங்கிப் போகிறார்கள். ஆனால் இவ்வளவு முறை கேடுகளில் ஈடு பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டு, சர்க்கார் சூடிட்டும், அமீர்சந்த் பியாரிலால் எனும் அமைப்பு எத்தகைய வளர்ச்சி அடைந்திருக்கிறது தெரியுமா? சர்க்காரின் அனுமதியில்லாமல், ஏற்றுமதி இறக்குமதித் துறையிலே ஈடுபட முடியாது என்பதை அறிவாய். அந்தத் துறையில் இந்த அமீர்சந்த் பியாரிலால் அமைப்பு

1959ல், இறக்குமதியில் 100க்கு 9 என்ற அளவு பங்கும், ஏற்றுமதியில் 100க்கு 12 என்ற அளவு பங்கும் பெற்றிருந்தது.

ஆனால் 1960ல், இதே கம்பெனி, இறக்குமதியில் 100க்கு 59 என்ற அளவிலும்; ஏற்றுமதியில் 100க்கு 60 என்ற அளவிலும் பெற்றிருக்கிறது. பார்த்தாயா வளர்ச்சியை! எந்த அமைப்பு? பல அமைச்சரகங்களால், பலமுறை முறை கேடாக நடந்து கொண்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டு, முகத்தில் கரி பூசப்பட்ட அமைப்பு!

முகத்திலே கரி பூசுவதுபோல, இந்த அமைப்பு, முறை கேடாக நடந்து கொண்டதற்காக, இந்த அமைப்புடன் தொடர்பு கொள்ளக் கூடாது! என்று சூடிட்டிருந்தும், எப்படி இந்த அமைப்பு இந்த வேகமான வளர்ச்சியைப் பெற முடிந்தது என்று கேட்கத்

தோன்றும். தம்பி! அந்த வேடிக்கையையும் சொல்லுகிறேன், கேளேன்.

1954, ஆகஸ்ட்—செப்டம்பரில், அமீர்சந்த் பியாரிலால் என்ற அமைப்பு, முறை கேடாக நடந்ததற்காக, வீட்டமைப்பு அமைச்சரகம், குடிட்டது, இந்த அமைப்புடன் எந்த விதமான ஒப்பந்தமும் கொள்ளக் கூடாது என்று.

முதலாளி திணறிப் போயிருப்பார் என்றுதானே எண்ணிக் கொள்கிறாய்! பணம், தம்பி! பணம்; கோடி கோடியாக!! தந்திரம் தன்னாலே வருமே!

அமீர்சந்த் பியாரிலால் என்ற பெயருடைய அமைப்பின் மீதுதானே நடவடிக்கை! இருக்கட்டுமே என்று கூறிவிட்டு, முதலாளி ஒரு புன்னகை காட்டுகிறார்; திட்டம் தயாராகிறது.

சுரேந்திரா ஓவர்சீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற புதிய அமைப்பு துவக்கப்படுகிறது.

சர்க்காரின் கோபப் பார்வை, அமீர்சந்த் பியாரிலால் என்ற அமைப்பின்மீதுதானே! இது புத்தம் புதிது! சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட்!!

52 காண்ட்ராக்டுகள் ஒப்பந்தங்கள் கிடைக்கின்றன சுரேந்திராவுக்கு!! எஃகு இறக்குமதி செய்வதற்கான அனுமதி! தொகை? **23 கோடி ரூபாய்.**

சுரேந்திரா ஓவர்சீஸ் பிரைவேட் கம்பெனி, எவருடையது? பொதுக்கணக்குக் குழு தெரிவிக்கிறது, அதுவும் அமீர்சந்த் பியாரிலால் அமைப்புக்கு உட்பட்டதுதான் என்று.

உரையாடல் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்துபாரேன், தம்பி! சுவையாக இருக்கும்.

> எஃகு இறக்குமதி செய்ய அனுமதி வேண்டும்?
>
> யாருக்கு? உனக்கா? முறைகேடாக நடந்ததற்காகக்கரிபூசப்பட்டகம்பெனிக்கா? என்ன துணிவு!
>
> ஐயையே! அனுமதி யார் கேட்பதாக எண்ணிக்கொண்டு பேசுகிறீர்கள்? கரி பூசப்பட்டது யார்மீது, அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி மீது!
>
> ஆமாம்! அந்த அமைப்பின்மீதுதான்.
>
> இது, அமீர்சந்த் பியாரிலால் என்ற அமைப்பு அல்ல. இது சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட்! இந்த அமைப்பின்மீது மாசு மருவு கிடையாது.
>
> புதிய கம்பெனியா? ஆனால் இரண்டும் ஒன்று அல்லவா? சட்டப்படி, இது ஒரு தனி கம்பெனி! இந்த அமைப்பிற்கு, இறக்குமதி அனுமதி தரமுடியாது என்று மறுக்க, காரணம் ஒன்றும் கிடையாது...ஆகவே...

இப்படித்தான் தம்பி! சர்க்கார் குடிட்டாலும், இந்த அமைப்பு வளர்ச்சி அடைந்திட முடிந்தது.

இவ்விதமாக, பணபலத்தாலும், சட்டத்தின் சந்து பொந்துகளிலே நுழைந்து தப்பித்துக் கொள்ளும் சாமர்த்தியத்தாலும் பல அமைப்புகள் இன்று, அரசையே ஆட்டிப்படைக்கத்தக்க அளவு வலிவு பெற்று விளங்குகின்றன. பாட்டாளிகளின் உழைப்பினாலும் பொதுமக்கள் விலை கொடுத்து பண்டம் பலவற்றை வாங்குவதாலும் குவியும் செல்வத்தை, இத்தகைய அமைப்புகளின் அதிபர்கள் தமதாக்கிக் கொள்கின்றனர்.

நாட்டிலே வளர்ச்சியேவா இல்லை; செல்வம் பெருகவே இல்லையா? என்று சிறிதளவு கோபத்துடன் கேட்கின்றனர், காங்கிரசிலே உள்ள நல்லவர்கள்.

வளர்ச்சியும் செல்வப் பெருக்கமும் நிச்சயம் ஏற்பட்டுள்ளன; மறுப்பார் இல்லை. ஆனால் வளர்ச்சியால் வசதி பெற்றவர்கள் யாரார்? செல்வப் பெருக்கம் எவரிடம் போய்ச் சேர்ந்தது என்பதுதான் தம்பி! நாம் கேட்கும் கேள்வி.

மான் எங்கேயும் போய்விடவில்லை, வேங்கையின் வயிற்றிலேதான் இருக்கிறது என்று கூறுவதுபோல, செல்வப் பெருக்கம் எங்கேயும் போய்விடவில்லை, முதலாளிகளிடம்தான் இருக்கிறது என்று கூறிடும் துணிச்சலே பிறந்திருக்கிறது சில அமைச்சர்களுக்கு.

தம்பி! **1949-50ல் சுரங்கத் தொழில் மூலம் உற்பத்தியான செல்வம் 110 கோடி ரூபாய் மதிப்புள்ளது. இதே துறையில் 1960–61ல் 183 கோடி ரூபாய் அளவு கிடைத்திருக்கிறது.** வளர்ச்சி! சந்தேகமில்லை! புலியின் வயிறு பெருத்திருக்கிறது! உள்ளே புள்ளி மான்குட்டி!!

தேயிலைத் தொழிலின் மூலம், 1949—50ல் 133. கோடி, 1960-61ல் 242 கோடி ரூபாய்.

தொழிற்சாலைகள் மூலம் 1949-50ல் 1333 கோடி 1960–61ல் 4003 கோடி!

கப்பல் துறை மூலம் 1949 — 50ல் 18 கோடி, 1960—61ல் 135 கோடி!

பாங்கித் தொழில், இன்ஷூரன்ஸ் தொழில் மூலம், 1949—50ல் கிடைத்தது 68 கோடி, 1960–61ல் கிடைத்தது 138!

தம்பி! **மொத்தத்தில் பல்வேறு துறைகளின் மூலம் உற்பத்தியான செல்வம், 1949—50ல் 1662 .கோடி— 1960—61ல் 4741 கோடி!!**

இந்தச் செல்வம், சமூகத்தில் சீராகப் பரவி இருந்தால் மக்களின் வாழ்க்கை இத்தனைச் சீர்கேடாகவா இருக்கும்!

இந்தச் செல்வத்தில் மிகப் பெரும் பகுதி, நிபுணர்கள் கூறுகிறார்கள்—காங்கிரஸ் தலைவர்களும் மறுக்கவில்லை—ஏழைக்கு வந்து சேரவில்லை—பணக்காரனை மேலும் பணக்காரனாக்கி இருக்கிறது.

இந்தச் செல்வத்திலே பெரும் பகுதி, இந்தியாவிலே ஒரு நூறு பேர்களிடம்—கோடீஸ்வரர்களிடம்—போய்க் குவிந்திருக்கிறது என்ற உண்மையை மறுப்பவர் எவரும் இல்லை.

அவர்கள் வைத்திருக்கும் கணக்கோ—துப்பறியும் இலாகாவையே திணற வைக்கிற முறையிலே இருக்கிறது.

மறுபடியும் அந்தப் பாட்டுதான் நினைவிற்கு வருகிறது.

> **அனுபவி ராஜான்னு**
> **அனுப்பி வைச்சான்!**

ஆண்டவன் கொடுத்ததாகச் சொல்லிக் கொள்வது, பழையமுறை. இப்போது ஆள்பவர் கொடுக்கிறார்கள்—வாய்ப்பு.

கொடுமை!—என்கிறாய் தம்பி! எனக்கு அதைவிடக்கொடுமையாகத் தென்படுவது என்ன தெரியுமா, இதைச் செய்து கொண்டே, கூச்சப்படாமல், சோஷியலிசமும் பேசுகிறார்களே, அதுதான், தம்பி!!

அண்ணன்,

அண்ணாதுரை

2—13

முனிவர் மண்டபம்

புத்தபுரத்தினின்றும் ஒரு கல் தூரத்திலிருந்த ஏரியின் வடக்குக் கோடியில் ஒரு குன்று, அந்தக் குன்றின் அடிவாரத்திலுள்ள பாறையின் வெடிப்பில்தான் முன்பு தமயந்தி தூமகேதுவிற்கு ஓலை வைத்ததும், அதைக் குலசேகரன் வேங்கைமரத்தின் மறைவில் நின்று பார்த்ததுமாகும்.

அந்த வேங்கை மரத்தினின்றும் புத்தபுரம் இருக்கும் திசையில் சிறிது தூரம் சென்றால், ஒரு பெரிய குளம் இருந்தது.

அக்குளத்தைச் சுற்றிலும் கட்டப்பட்டிருந்த கற்படிகள் கலகலத்துச் சரிந்துபோயிருந்தன. உள்ளே மண் நிறைந்து, புல் பூண்டு முளைத்து, ஒரு மூலையில் மட்டும் பாசி பிடித்த தண்ணீர் கொஞ்சம் தேங்கியிருந்தது.

அக்குளக்கரையின்மீதிருந்த ஒரு மண்டபம், உள்ளும் புறமும் அற்புதமான சிற்பவேலைப்பாடுகளோடு விளங்கியது.

சிற்ப எழில் ஒளிவிடும் அந்த மண்டபத்தின் நாற்புறங்களிலும், நாலாவிதமான மரஞ்செடி கொடிகள் அடர்ந்து வளர்ந்திருந்தன. மரங்களில் காய்கனி வகைகளும், செடிகளின் வண்ணப் பூக்களும் குலுங்கிக்கொண்டிருந்தன.

காய்கனிகளைப் பறிக்கவோ, வாச மலர்களைக் கொய்யவோ அங்கு யாரும் வருவது கிடையாது!

அந்தஇடத்தில் மனிதரின் காலடி பட்டு வெகுகாலமாகி விட்டது! பறவைகளையும் மிருகங்களையும் தவிர, மனிதரின் நிழல்கூட அப்பக்கமாக விழுவது கிடையாது!

பார்க்கும்போதே நாக்கில் நீர் கசியும் தித்திப்புக் கனிகள்—கண்ணையும் கருத்தையும் கவரும் வித விதமான அழகு மலர்கள் — கைத்திறனும் கலையழகும் பெற்று, கண்டதும் உள்ளத்தில் களிப்பு பொங்கச் செய்யும் மண்டபத்துச் சிற்பங்கள்—இவ்வளவும் உள்ளன ஆங்கே! ஆனால் அவ்வூரார் யாரும் அங்கு வருவதுகிடையாது! அவ்வூராருக்குக் கனிகள் என்றால் கசப்பா? மலர்களைக் கண்டால் பிடிக்காதா? சிற்பங்களை ரசிக்கத் தெரியாதா? இல்லை! அவர்களை அப்பக்கமாகஎடுத்தடிவைக்க முடியாதபடி, பயம் தடுத்தது!

அந்தக் குளக்கரையின் பக்கமாகச் சென்றவர், உயிரோடோ அல்லது புத்தி சுவாதீனத்தோடோ திரும்பியது கிடையாது — இப்படி ஒரு பயம். மக்களின் உள்ளத்தில் காரிருளை எழச் செய்துவிட்டது.

அந்தச் சிற்ப மண்டபத்தைப் பற்றி இரு கதைகள், அவ்வட்டாரத்தில் உள்ளன.

வெகுகாலத்திற்கு முன்பு வஞ்சிமா நகரில் வாழ்ந்த புகழ்மிக்க சிற்பி ஒருவனை — ஏதோ காரணத்திற்காக-சேர மன்னன் சிரச்சேதம் செய்துவிட்டானாம். அந்தச் சிற்பிக்கு ஒரு மாணாக்கன் இருந்தானாம்.

அந்த மாணாக்கனும் தன் ஆசிரியனைப்போலவே, சிற்பக் கலையில் வல்லோனாக இருந்தான், வணக்கத்திற்குரிய ஆசிரியன் வதையுண்ட பிறகு, அந்தத் துக்கத்தைத் தாள முடியாமல் வஞ்சிமாநகரைவிட்டு, புத்தபுரத்திற்கு வந்துவிட்டான்.

ஆசிரியன்பால் கற்ற கலைகளுக்கு உயிரளித்து—எக்காலத்தும் சாகா எழில்கொள்ளச் செய்ய விரும்பி—அக்குளக்கரையிலுள்ள சிற்ப மண்டபத்தை, அவன் கட்டி முடித்தான்.

ஒருசமயம் அப்பக்கமாக வந்த அந்தச் சேர மன்னன், சிற்பங்களால் சிங்காரிக்கப்பட்ட அதைப் போன்ற ஓர் மண்டபத்தை, அரண்மனையின் பூஞ்சோலையில் அமைத்துத்தர வேண்டுமென்று அந்தச் சிறிய சிற்பியிடம் கேட்டான். அதற்கு அச்சிற்பி முடியவே முடியாது என்று மறுத்துவிட்டானாம்.

'முடியாதா? பார், அப்படியே இந்த மண்டபத்தை பெயர்த்தெடுத்துக்கொண்டுபோய், அரண்மனையின் உத்தியானவனத்தில் வைக்கும்படிச் செய்கிறேன்!' என்று கோபத்தோடு கொக்கரித்தான். அந்தக் கோலேந்தியின் கோபத்திற்கும் ஆணவ கொக்கரிப்புக்கும், அந்தச் சிற்பி சிரம் தாழ்த்திடவில்லை.

மறுநாள் காலை உதித்த செங்கதிரோன், இரத்த வெள்ளத்தில் அச்சிற்பி பிணமாக மிதந்து கொண்டிருப்பதைக் கண்டான்! அப்படிக் கொலை செய்யப்பட்டவன் பேயாக மாறிவிட்டானாம்! அந்த மண்டபத்தை அடியோடு பெயர்த்தெடுத்துப் போக அரசனின் ஆட்கள் வந்தனர். அவர்களை அருகே நெருங்காதபடி, அப்பேய் துரத்தித்துரத்தி அடித்ததாம்! முரட்டுத் தைரியத்தோடு மண்டபத்தைத் தொட முனைந்தவர்கள், அப்படியே சுருண்டு விழுந்து, இரத்த ரத்தமாகக் கக்கி அதே இடத்தில் பிணங்களானார்களாம்!

யார் அப்பக்கமாகச் சென்றாலும், அவர்கள் அரசனின் ஆட்கள் என்றும், மண்டபத்தை அபகரித்துச் செல்லத்தான் வருகிறார்கள் என்றும் நினைத்து, அந்தப் பேய் அவர்களை அடித்துக் கொன்றுவிடுமாம்!

அந்த மண்டபத்தைப் பற்றி இது ஒரு கதை! மற்றொரு கதை...

சிற்பி கொலை செய்யப்பட்ட சில ஆண்டுகளுக்குப் பிறகு, தாடி வளர்த்த ஒருவன் அந்த மண்டபத்தில் வந்து தங்கினானாம்! அந்த மண்டபத்தினுள் ஒரு காளி சிலை வைத்து, அதற்கு எந்நேரமும் பூஜை செய்து கொண்டிருந்தானாம்! ஆகவே மக்கள் அவனைக் காளி முனிவர் என்று அழைத்தனர்.

அந்த மண்டபத்தைச் சுற்றிலும் கனி மரங்களையும் பூஞ்செடிகளையும் வைத்து அவன் வளர்த்தான். காளி பூஜையோடு அவன் வைத்திய

முய் செய்ய ஆரம்பிக்கவே அவ்விடத்திற்குச் சுற்றுப்புற ஊர்களிலிருந்தெல்லாம் மக்கள் வர ஆரம்பித்தனர்.

எந்த மண்டபத்தின் பக்கத்தில் பகலில்கூட நெருங்கப் பயந்தனரோ, அதே மண்டபத்தைச் சுற்றிலும் இரவு நேரங்களில்கூட, பயமின்றி மக்கள் படுத்துத் தூங்கினர்! மந்திரத்தால் அப்பேயை, முனிவன் கட்டி விட்டதாக அவர்கள் நம்பினர்!

எறும்பு புற்று கட்டுகிறது. பாம்பு அதனுள் வந்து புகுந்து கொள்கிறது. அதை எறும்புப் புற்று என்று சொல்லாமல், பாம்புப் புற்று என்றே அனைவரும் சொல்கிறார்கள் அல்லவா? அதைப் போல, அந்த மண்டபத்தை இரவும் பகலுமாக உழைத்து உருவாக்கியவன் ஒருவன்—ஆனால் வேறொருவன் பெயரையே அது பெற்றது—'முனிவர் மண்டபம்' என்று!

காளி முனிவனின் புகழ் மிக விரைவில் பல திசைகளிலும் பரவியது. அவனுக்குச் செல்வம் சேர்ந்தது—சீடர்களும் உண்டாயினர்.

அந்த முனிவன் இரவு நேரங்களில் காளியோடு பேசுவானாம். அவனது சொல்லைக் காளி தட்டவே மாட்டாளாம்.

இப்படியிருக்கையில் ஓர் இரவு, 'தாயே! என்னைக் கைலாயத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்! எம்பிரானை ஒருமுறை நேருக்கு நேர் தரிசித்து, சிறிதுநேரம்பேசவேண்டுமென்ற ஆசை, வெகு காலமாக அடியேன் மனதை அரித்துக்கொண்டிருக்கிறது!' என்றானாம்.

அதற்குக் காளி சிரித்துவிட்டு, 'பக்தா, கைலாயத்திற்கு நான் ஒருத்திதான் செல்ல முடியுமே அன்றி, உடன் வேறு யாரையாவது அழைத்துச் சென்றால், சிவகணங்கள் வழிவிட மாட்டார்கள். மாதா நான் சொல்கிறேன், மறந்து விடு அந்த ஆசையை!' என்றாளாம்!

அவன் கண்ணீர் மல்க வேண்டியும், கடைசி வரை அவள் மறுத்துவிடவே, அதனால் சோகமும் கோபமும் அடைந்து, காளியின் கையிலிருந்த சூலத்தைப் பிடுங்கி, அச்சூலத்தால் தன் கழுத்தில் குத்திக் கொண்டு அக்கணமே உயிரைப் போக்கிக் கொண்டானாம்!

அவ்விதமாகத் தற்கொலை செய்து கொண்ட முனிவன், பேயாக மாறிவிட்டான். அக்குளத்தின் பக்கமாக யாராவது வந்தால் காளிக்குத்தான் பூஜை செய்ய வருகிறார்கள் என்று சீற்றமடைந்து, அவர்களை அப்பேய் கொன்று விடுமாம்!

அந்த முனிவரின் மரணத்தைப் பற்றி வேறு சிலர், வேறு விதமாகக் கூறினார்கள்.

அந்த முனிவன் பெரிய வேடதாரி என்றும், காளி பூஜை—வைத்தியம்—என்று சொல்லிக்கொண்டு ஆபாச காமக்களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தான் என்றும், அப்படி அவனால் கற்பழிக்கப்பட்ட கன்னிப் பெண்ணின் அண்ணனால் குத்திக் கொல்லப்பட்டான் என்றும் ஒரு வதந்தி அப்பக்கத்தில் உலவி வந்தது!

அந்த இரண்டு கதைகளில் என்னதான் கருத்து மாறுபாடு இருந்தபோதிலும், ஒரே ஒரு விஷயத்தை மட்டும் எல்லோரும் முழு மனதோடு நம்பினார்கள்.

அந்த மண்டபத்தைக் கட்டிய சிற்பியின் உயிரும் கொலையால் பிரிந்தது—காளி முனிவனின் ஆவியும் கொலையாலோ அல்லது தற்கொலையாலோ பிரிந்தது! அதாவது அவர்களிருவரும் அகால மரணமடைந்தவர்கள், பேயாக மாறி அலைவார்கள் என்று கிராம மக்கள் நம்பினார்கள்!

எனவே, எவரும் அக்குளத்தின் பக்கமாக எடுத்தடி வைப்பது கிடையாது!

அந்தக் கதைகளைத் திருமேனி கேட்டிருக்கிறாள். ஆனாலும் அன்று மாலை தன்னந்தனியாக அக்குளக் கரை மண்டபத்திற்குச் சென்றாள்.

பேய் பூதம் என்பவையெல்லாம் அறிவில்லாத மக்களின் கோழை உள்ளத்தில் எழுந்த கற்பனைகள். என்பதை அவள் அறிவாள். ஆகவே அக் கதைகளைக் கேட்டு துடை நடுக்கம் கொள்ளாமல், தைரியத்தோடே அங்கு சென்றாள்.

மண்டபத்தின் சிற்பங்களை ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு, எதிரே இருந்த ஒருபெரிய குண்டுக் கல்லின்மீது உட்கார்ந்தாள்.

அவளுக்குப் பக்கத்தில் நாகலிங்க மரமொன்று இருந்தது. உட்கார்ந்தபடியே, அந்த மரத்தின் அடிப்பாகத்திலிருந்தும் இரண்டு மலர்களை எட்டிப் பறித்தாள்.

ஒரு மலரை நுகர்ந்து பார்த்ததும், அதன் நறுமணம் அவளது குமுத முகத்தை மலரச் செய்தது. அதைக் கருநிறக்கூந்தலில் சொருகிக்கொண்டு, கையிலிருந்த மற்றொரு மலரைக் கண்குளிரப் பார்த்தாள்.

மரத்திலிருந்து பறித்தெடுத்த அந்த நாகலிங்கப்பூவின் தடிப்பான சிவப்பு நிற இதழ்களை, விரலால் தடவிப் பார்த்தாள். அந்தச் செந்நிற இதழ்களுக்கு நடுவே, நாகப் பாம்பு படம் எடுத்ததைப் போன்ற ஒரு வளைவு, அந்த வளைவின் முனையில் பட்டுக் குஞ்சம் போன்று அடர்ந்த மகரந்தக் காம்புகள், அந்தக் காம்புகளின் அடி சிவப்பாகவும், முனை மஞ்சள் நிறத்திலுமிருந்தன.

"ஆகா! நல்ல பாம்பு படம் எடுத்ததைப் போலவே இருக்கிறதே இது!" என்ற பூரிப்போடு தனது மலர்க் கன்னத்தில் அந்த மலரை ஒற்றியெடுத்தாள்.

திடீரென்று ஏதோ சப்தம் கேட்கவே, திடுக்கிட்டவளாய் எழுந்து நின்று சுற்று முற்றும் பார்த்தாள். ஒன்றும் காணோம். தென்றலில் அலைந்த மேலாடையைச் சரிசெய்து கொண்டு, பழையபடியே அந்தக் கல்லின்மீது அமர்ந்தாள்.

"ஏதோ சப்தம் கேட்டதே? அது என்ன சப்தம்? ஒருவேளை ஏதாகிலும் மிருகம் கத்தியிருக்குமோ? ஆமாம். அப்படித்தான் இருக்க வேண்டும்! இதுவே வேறு யாராகிலும் கேட்டிருந்தால், பேயின் இரைச்சல் என்று பயந்து ஓட, வழியில் ஏதாகிலும் முள் மரத்தின் கிளையில் துணி மாட்டிக்கொள்ள, பின்னால் வந்து பேய் இழுக்கிறது என்று அலறி விழ...எவ்வளவு விபரீதம் நடந்துவிட்டிருக்கும்! என்றெண்ணி எழில் உதட்டில் புன்னகையை ஏற்றியவள், தனக்கு எதிரே அடர்ந்திருந்த செடி கொடிகளுக்குப் பின்னால் ஏதோ சலசலப்பு கேட்கவே, தயக்கத்தோடே எழுந்து நின்றாள்.

இருக்க இருக்க அந்தச் சலசலப்பு அதிகமாயிற்று. மிரளும் கண்களோடு அத்திசையில் பார்த்தாள். கால்கள் சில்லிட்டன.

'திருமேனி!' என்ற குரலொலி கேட்டதும், அச்சமும் ஆச்சரியமும் அலை அலையாய் உள்ளத்தில் புரண்டெழ, உள்ளங் கால்களை உயர்த்தி அத்திசையில் எட்டிப் பார்த்தாள்.

இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயதுடைய வாலிபன் ஒருவன், சிறந்த ஆடையணி அலங்காரத்தோடும், சிரித்த முகத்தோடும் அந்த மின்னல் இடையாளை நோக்கி வந்தான்.

இரண்டு புலிக் குட்டிகளை ஒரு கயிற்றில் கட்டி, அக்கயிற்றை அவன் கையில் பிடித்துக் கொண்டிருந்தான். அந்தப் புலிக் குட்டிகள் அவனை இழுத்துக்கொண்டு ஓடிவந்தன.

அந்த வாலிபன் உயர்ந்து வளர்ந்திருந்தான். கள்ளுண்டவன் கண்களைப்போல, அவனது குண்டு விழிகளில் ஒரு போதை நிறைந்திருந்தது. குறுகிய நெற்றியும், சிறிது நீண்ட மூக்கும், கனமான கீழ் உதடும், கொஞ்சம் முன் தள்ளிய முகவாயும் கொண்ட அவன்—சேர நாட்டு இளவரசன் கனகசேனன் என்பதைத் திருமேனி அறிவாள்.

அந்த ஆடம்பரப் பிரியன் அவளை அடையவேண்டும் என்பதற்காகவே இலங்கைக்குப் பலமுறை வந்திருந்தான். அவனைப் பார்க்கும்போதெல்லாம், அவளுக்குக் கேலிச் சிரிப்புத்தான் உண்டாகும்.

சேர நாட்டோடு மண உறவு கொள்ளவேண்டும். அதன் மூலம் சோழ பாண்டிய நாடுகளைத் தன் ஆட்சியின்கீழ் கொண்டுவர வேண்டுமென்பது பராக்கிரம பாகுவின் உள்ளெண்ணம். தந்தையின் அந்த ரங்க ஆசை, திருமேனிக்கும் தெரிந்திருந்தது. அதனால் கனகசேனன் தன் அருகே வரும்போதும், வர்ணனை வார்த்தைகளை உகுக்கும் போதும், முதலில் சிறிது பொறுமையாக இருந்துவிட்டு, பிறகு அனல் வார்த்தைகளை அள்ளி வீசி, அவ்விடத்தை விட்டு அவனை ஓடச் செய்வாள்.

மதுரைப் போரில் இலங்கைத் தளபதிகளின் தலைகள் வெட்டப்பட்டு, கோட்டைச் சுவரின்மீது வைக்கப்பட்ட அவமானச் செய்திக்குப் பிறகு—கனகசேனனுக்குத் தன் மகளைக் கொடுத்து, அவனையே பாண்டிய சிம்மாசனத்தில் அமர்த்தப்போவதாகப் பராக்கிரமபாகு வெளிப்படையாகவே சபதம் செய்தான்.

குலசேகரன் மீதுகொண்ட ஆத்திரத்தால், திருமேனியின் திருமணத்திற்கு நாள் கூட நிச்சயித்துவிட்டான். ஆனால் திருமேனிக்குத் திடீரென்று புத்தி மாறாட்டம் ஏற்பட்டுவிடவே, அந்த ஏற்பாடுகள் அப்படியே நின்றுவிட்டன.

திருமேனி சுயநினைவோடு இல்லை—பைத்தியம் பிடித்து அரண்மனையைவிட்டு அடிக்கடி காட்டிற்கு ஓடிவிடுகிறாள்—என்று தெரிந்த பிறகும், கனகசேனனின் ஆசை அடங்கவில்லை. ஆசைக்கினியாளின் பரிதாப நிலையைக் கண்டு, கண்கலங்கினான்.

“கண்ணே, திருமேனி! சொட்டும் உன் அழகில் ஒரு துளியும் குறையவில்லையே! இளமை மெருகு குலையவில்லையே! குயில் குரல் மாறவில்லையே! குவளைக் கண் கவர்ச்சியை இழக்கவில்லையே! ஆனால், அய்யோ, உனக்குச் சுயநினைவு இல்லையே! அது மட்டும் சரியாக இருந்திருந்தால்—அன்றே நம் திருமணம் நடந்துவிட்டிருக்குமே! கணவனும் மனைவியுமாகக் கன்னி முனையில் நின்று, களிப்புப் பண் பாடி மகிழ்ந்திருப்போமே!” என்று திருமேனியின் எதிரிலேயே அவன் அழுது நின்றான்.

திருமேனி என்றால் அவனுக்கு அவ்வளவு ஆசை, அவளுக்கோ அவனைக் கண்டாலே கசப்பு.

வருவது கனகசேனன் என்பதை அறிந்ததும், அவள் நாகலிங்கப் பூவை நுகர்ந்து பார்த்தபடி, அவ்விடத்தைவிட்டுச் செல்லத்தொடங்கினாள்.

‘போகாதே, நில் திருமேனி!’ என்று சொல்லிக்கொண்டே அவன் நாகலிங்க மரத்தின் அருகில் வந்து நின்றான்.

‘அட, என்னையா நிற்கச் சொல்கிறாய்?’ என்று கேட்டபடியே திரும்பிப் பார்த்து, புருவத்தை உயர்த்தினாள்.

‘ஆமாம், திருமேனி — உன்னைத் தான் நிற்கச் சொல்கிறேன்!’

‘அட! உனக்கு என் பெயர் கூடத் தெரிந்திருக்கிறதே!’

‘நான் யார் என்று உனக்குத் தெரியவில்லையா, திருமேனி?’

‘தெரியுமே! நன்றாகத் தெரியுமே’ என்று சொல்லிக்கொண்டே, அவனை நோக்கி நடந்து வந்தாள்.

புலிக்குட்டிகள் அவளைப் பார்த்துச் சீறவே, அப்படியே நின்று அவனுக்கு ‘ஈ! ஈ!’ என்று அழகு காட்டினாள்.

“நான் யார் என்று தெரிகிறது அல்லவா, உனக்கு?”

‘தெரியும்! தெரியும்! தெரியும்!

‘தெரியும்? சொல் பார்க்கலாம்!’

‘இராமாயணத்தில் வருகிறானே ......’

யார் இராமனா?’

ஆமாம், அவன் தூதன்தான் நீ! பார்த்தாயா, உன் முகத்தைப் பார்த்ததுமே தெரிந்துகொண்டேன்!’ என்று குரங்கைப்போலத் தன் முகத்தை, அவள் மாற்றிக் காட்டினாள்.

அவள் மீது பாய புலிக்குட்டிகள் முன்னங்கால்களைத் தூக்கின. அவைகளை அதட்டி இழுத்துப் பிடித்துக்கொண்டு, ‘திருமேனி! நான்தான் கனகசேனன்’ என்று பரிதாபம் நிறைந்த குரலில் அவன் கூறினான்.

‘கனகசேனனா? ஆமாம், எங்கோ கேள்விப்பட்டிருக்கிறேனே? ஆமாமாம், நினைவிற்கு வந்துவிட்டது துரோபதையின் ஐந்து கணவன்மார்களிலே ஒருவன்தானே நீ? ஓகோ அவன் பெயர் பீமசேனனா? உன் பெயர் என்னவென்று சொன்னாய்?’

‘கனக சேனன்’

‘இவன் யாராய் இருப்பான்?’ என்று தனக்குத்தானே கேட்டுக் கொள்பவளைப்போலச் சொல்லி, தரையைப் பார்த்தபடி மூக்கைத்தடவிக் கொடுத்தாள்.

‘திருமேனி! இதென்ன மரியாதை இல்லாமல், அவன் இவன் என்று பேசுகிறாயே?’ என்று கோபத்தோடு அவன் கேட்டான்.

“அப்படித்தான் நான் பேசுவேன் அதைக்கேட்க நீ யார்?” என்று கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு, வானத்தைப் பார்த்து, ஒரு காலை ஆட்டியபடி கூறினாள்.

‘திருமேனி......’

‘இந்தா, என் பெயரை அடிக்கடி சொல்லக்கூடாது— — தெரிகிறதா?’

4-ம் பக்கத் தொடர்ச்சி

நடாத்தி காங்கிரசை வெள்ளையன் வதைத்த நேரத்தில் உடன் இருந்தோரா? தண்டியாத்திரை பற்றிய மகிமையை நாட்டினருக்கு எடுத்துரைத்து எழுச்சி ஊட்டினவர்களா? உப்புக்காய்ச்சினவர்களா? வரி கொடா இயக்கம் நடாத்தி வாட்ட வருத்தத்தை ஏற்றுக்கொண்டவர்களா? இல்லை! இல்லை! இல்லை! அவர்கள், விளைந்த காட்டுக்குருவிகள்! புதர்மறைவு நரிகள்! புற்று தேடிக்கொள்ளும் பாம்புகள்!! நாடு அறியும்! நல்லோர் அறிவர்! இந்நிலைபற்றி எண்ணி எண்ணி மனம் குமுறுகின்றனர் உண்மைக்காங்கிரஸ்காரர்கள். உள்ளே புகுந்துகொண்டவர்களோ, கொட்டமடிக்கின்றனர்.

இதனைச் சுட்டிக்காட்டித்தான் அபித்அலி போன்றவர்கள் கண்டிக்கிறார்கள். கண்டித்து? பயன்காணோம்! ஏன்? அவரே எடுத்துக் காட்டியுள்ளபடி, கெட்ட நாணயம், நல்ல நாணயத்த விரட்டிவிட்டது: புதியவர்கள், பழையவர்களை மூலைக்குத் துரத்திவிட்டனர்.

இன்று மேடையிலென்றாலும்சரி, இதழ்த் தலைப்புகளிலென்றாலும்சரி, ஆட்சிமன்றங்களென்றாலும்சரி, மண்டலமன்றங்களென்றாலும்சரி, யாருக்கு முதலிடம் யாருக்கு முன்னிடம், யாருக்குச் சிறப்பிடம்? தடியடிபட்ட தியாகிக்கா? சிறை சென்ற சீலர்களுக்கா? இன்னலையும் இழப்பையும் ஏற்றுக்கொண்ட செம்மல்களுக்கா? இல்லையே!

இவர் யார்? இவர் எப்போது காங்கிரசில் சேர்ந்தார்?-என்று கேட்டுக் கேட்டு அலுத்துப்போய், அந்தத் தியாகிகள், இனி நமக்கு இடம் இல்லை, உழைத்தோம், ஒரு உன்னதமான அமைப்பை உருவாக்கினோம், பிழைக்கத் தெரிந்தவன் அதனைத் தன் கருவியாக்கிக்கொண்டான், நம்மைவிட்டு நமது அமைப்பு நெடுந்தூரம் சென்றுவிட்டது என்று குமுறுகின்றனர்.

மாநிலம் மாநிலமாக, மாவட்டம் மாவட்டமாக, ஊர் ஊராக, ஆராய்ந்து பார்த்தால், கெட்ட நாணயம் நல்ல நாணயத்தை விரட்டிவிட்டிருப்பது நன்றாகப் புரியும். புரிகிறது அபித் அலி போன்றவர்களுக்கு. ஆனால் அவர்களையும், அந்தப் பழைய நாட்களையும் மக்கள் மறந்தே போய்விடக்கூடிய விதத்தில், புதியவர்கள் கொலுவீற்றிருக்கிறார்கள்! நாடு தாங்காது என்கிறார் அபித் அலி. தாங்கிக்கொள்கிற வரையிலே ஆதாயம்தானே என்கிறார்கள் புதியவர்கள்.

நல்ல நாணயத்தைக் கெட்ட நாணயம் விரட்டிவிட்ட கொடுமை மட்டுமல்ல, பழைய தூய்மை, தொண்டுள்ளம், நேர்மையில் நாட்டம் ஆகிய பண்புகளும் பட்டுப்போய்விட்டன என்பதுபற்றி வருந்துகிறார், அபித் அலி.

> தலைவர்களிடையேயும் தொண்டர்களிடையேயும் முன்பு இருந்து வந்த சேவை உணர்ச்சி, தன்னல மறுப்பு, உயர்நோக்கம் ஆகியவை, பதினெட்டு ஆண்டுக் காலம் ஈடு எதிர்ப்பு அற்ற முறையில் அதிகாரத்தை அனுபவித்ததால், கரைந்துபோய்விட்டிருக்கிறது என்று கூறி அவர் கலங்குகிறார்.

உண்மைக் காங்கிரசாரின் நிலையும், அவர்கள் கொண்டிருந்த நேர்மை உணர்ச்சியும் பாழ்பட்டிருப்பதைக் கூறியதுடன் ஏழை அல்லற்படுவதையும், திட்டமிட்டதன் பலன் அவனுக்குப் போய்ச் சேராத கொடுமையையும், அவர் விளக்கியுள்ளார்.

பம்பாயில் இந்தத் திங்கள் 14ம் நாள்--சுதந்திர விழாவுக்கு முன்னதாக--பெற்ற சுதந்திம் எப்படிப் பாழாக்கப்பட்டு வருகிறது என்பதனை எடுத்துக் காட்டிப் பேசியிருக்கிறார், பழைய காங்கிரஸ் தலைவரொருவர்.

காங்கிரஸ் கட்சியின் பழைய நிலைக்கும், இன்றைய நிலைக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்தாலன்றி, இந்நாட்டிலே நேர்மையான ஒரு அரசு முறை அமைவது இயலாததாகிவிடும்.

உண்மையை எடுத்துக் கூறுவதன் மூலம், அபித் அலி மக்களாட்சி முறைக்குச் சிறந்ததோர் தொண்டு புரிந்திருக்கிறார் வரவேற்கிறோம்.

'உன்னைப் பெயரிட்டு நான் அழைக்காமல், வேறு எவன் அழைப்பான்? அப்படி அழைக்க, என்னைத் தவிர வேறு எவனுக்கு உரிமை இருக்கிறது?'

'உரிமை உனக்கு இருக்கிறதா!'

'ஆமாம், திருமேனி! உன்னைத்தானே நான் மணஞ்செய்துகொள்ளப் போகிறேன்? உன் கணவன் தானே நான்?'

கனகசேனன் இப்படிச் சொல்லியதைக் கேட்டதும், அவள் இடியிடியெனச் சிரித்தாள்.

'எதற்காகச் சிரிக்கிறாய், இப்படி'

'உன்னைத்தான் நான் மணஞ் செய்துகொள்ளப் போகிறேனா?'

'ஏன் அதிலென்ன சந்தேகம்?

'சந்தேகமா? ஒரே ஒரு சந்தேகம் உனக்கு ஏதாகிலும் மூளைக் கோளாறு உண்டோ?'

'திருமேனி, கொஞ்சம்கூட உனக்குச் சுயநினைவே இல்லையா?'

"சுத்த பைத்தியம் நீ! ஒருமுறை திருமணஞ் செய்து கொண்டவள். திரும்பவும் எங்கேயாகிலும் மணம் செய்து கொள்வாளா?"

"யாருக்கு மணம் நடந்தது?"

"வேறு யாருக்கு — எனக்குத்தான்! நீ இருக்கிறாயே, பார்க்கச் சகிக்காமல் என் கணவர் எப்படியிருப்பார் தெரியுமா--அழகு என்றால் அழகு அவர்!" என்று சொல்லிக்கொண்டே, கையிலிருந்த நாகலிங்கப் பூவிற்கு ஒரு முத்தம் தந்தாள்.

"அக்கிரமமான பேச்செல்லாம் எதற்குப் பேசுகிறாய், திருமேனி?"

"அழு! அழு! நீ அழுது கொண்டிரு! நான் போகவேண்டும்--என் ஆசைக் கணவர் அங்கே காத்துக் கொண்டிருப்பார்!"

"அய்யோ, அப்படியெல்லாம் பேசக்கூடாது, திருமேனி! நான்தான் உன் கணவன்!"

"ஆ! என்ன ஆணவம் இவனுக்கு?" என்று அவனை அடிக்க கையை ஓங்கியபடி, அவள் ஓடினாள்.

புலிக்குட்டிகள் சீறவே, பின்னுக்கு நகர்ந்து நின்று, 'என்ன, வந்ததிலிருந்து பயமுறுத்திக் கொண்டே இருக்கிறீர்கள்! இதோ, உங்களைக் கொன்று போடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டே ஒரு பெரிய கல்லை இரண்டு கைகளாலும் தூக்கி, அருகிலிருந்த ஒரு பெரிய கல்லின்மீது ஏறி நின்று, அப்புலிக் குட்டிகளின் தலையில் போடப் போனாள்.

"திருமேனி! புலிக்குட்டிகளின் தலையில் போட்டு, அந்தக் கல்லைப் பாழாக்கிவிடாதே! அது வேண்டும்—வேறொருவன் தலையில் போட!"

தலைக்குமேலே கல்லைத் தூக்கிப் பிடித்தபடி அவனைப் பார்த்து, "யார் தலையில்?" என்று கேட்டாள்.

'நம் பகைவன் தலையில்!'

'யார் அவன்!'

'குலசேகரன்!'

'என்ன?'

'ஆமாம் அவனை இப்பொழுதுதான் பிடித்து, ஒரு மரத்தில் கட்டிவிட்டு வந்திருக்கிறேன்!'

'எங்கே என்று கேட்டபடி, கல்லைக் கீழே போட்டுவிட்டு, கவலையோடு அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள். [வளரும்]

2-ம் பக்கத் தொடர்ச்சி

லாம்'' தம்பியின் சத்தற்ற குரல் கேட்டு உள்ளூர கசிந்தார் பரமசிவம்! பிறரிடம் கையேந்துவது இத்தனைப் பலவீனமான செயலா!

இமைக்கும் நேரம்தான். மின் வெட்டாகச் சாடி மறைந்துவிட்டது இவ்வெண்ணம். மீண்டும் பழைய பரமசிவமாகத்தான் ஆகி நின்றார். மனைவிபோட்ட தூபத்தினால். "வேலை எப்போ ஆகிறது? நீ எப்போ பணத்தை எல்லாம் திருப்பித்தருவது!'' — என்னது? வியர்த்துவிட்டது குமரேசனுக்கு. உடன்பிறந்த அயலானை விழிகள் அளந்தன. ஏனிப்படி இருக்கிறார் இன்று? "சும்மா என்ன பேச்சு?'' பழசை எல்லாம் மெள்ளத் திருப்பித்தாப்பா. ஐந்தோ பத்தோ, வீட்டுச் செலவைப்போல் கடனையும் திருப்பித்தா — எனக்கும் இப்போ வரவர செலவு அதிகமாகிறது. கையில் பணமே இருப்பதில்லை...

அழுகை வந்துவிடும்போலாகி விட்டது குமரேசனுக்கு. விளையாட்டா? வினையா? இல்லை பணத்திமிரா?

"என் கையிலே ஏதண்ணா பணம்? இருந்தால் கேட்கவருவேனா இங்கே?''

"அதென்னமோ தெரியாது. கொஞ்சமாவது கொடுக்கிற வழியைப்பார். வாங்க வராதே இனி''

தமையனாரின் தீர்க்கமானபேச்சு, தம்பியின் நெஞ்சை முறுக்கிப் பிழிந்தது. இருந்தும் கடைசியாக ஒரு ஆசை. இல்லாமைக்கொடுமை! மீண்டும் கேட்கத் தூண்டியது வெட்கத்தைவிட்டு! "ரொம்ப முடையண்ணா அதனால்தான்...'' "இங்கே பார் குமரேசா, உனக்கு எப்போதான் முடையில்லை சொல்லு? உன் இல்லாமைக்கு நான் பிணையா''

எப்படித்தான் அவரால் இத்தனை அரக்கத்தனமாக நடந்துகொள்ள முடிந்ததோ? மனம் நொந்து வருகிறான் குமரேசன், சமயம் என்றால் உதவக்கூடாதா? அண்ணன், தம்பிக்குள் அத்தனைக்கணக்காபார்க்க வேண்டும்? என், கஷ்டசுகம் என்னோடுதானா? இவரை ஏதும் பாதிக்காதா? எனக்கென்ன என்கிறாரே? வேறு யாரைக் கேட்பது?

மனம் அலைபாயத் தவிக்கையில் வாயிற்புறம் நகர்ந்துவிட்டார் பரமசிவம். மேலே பேச வகையின்றி ஊமையாய், செவிடாய் உட்கார்ந்தான் குமரேசன்.

தெருவில் காய்கறி வண்டி வந்து நின்றது.

"சாமி காய் வேணுங்களா?'' என்று கேட்டவாறு கைவண்டியை நிறுத்திவிட்டு உள்ளே வந்தான் காய்கறிக்காரன். வழக்கப்படி பரமசிவம் கேட்டார். "என்ன வைத்திருக்கிறாய்?''

"எல்லாம் இருக்குங்க போய்ப் பாருங்க'' என்றவன் முன்னால் வந்து குமரேசனைக் கேட்டான்... "காய் வேணுமா சாமி?''

விழிகலங்க நிமிர்ந்தான் குமரேசன், அவனுக்கிருந்த மனவேதனையில் காய்வாங்கத்தானா தோன்றும்? "ஒன்றும் வேண்டாம் கோவிந்தா'' என்று அலுப்பாகச் சொல்லிவிட்டு எழுந்திருக்கையில் வண்டிக்கார கோவிந்தன் "சாமி வேலை ஏதாச்சும் கிடைச்சுதுங்களா? எனக்கேட்டான். அவ்வெளியவனின் பரிவு குமரேசனின் நெஞ்சுப்புண்ணுக்கு மருந்திட்டாற்போல் இதமாயிருந்தது.

அது அவனுக்கு அச்சமயம் வேண்டியும் இருநதது.

"இல்லையப்பா அலையாத இடமில்லை...உம்...உன் பணம்...'' இதயம் கூச குமரேசன் கூறினான். குறுக்கிட்டான் கோவிந்தன்.

"இருக்கட்டுங்க. எங்கே போகுது? வாங்கிக்கிட்டா போச்சு ...ஆ. இப்ப ஏதும் வேணுமா?

"ஊஹூம்.''

"சரிதான்...''

காய்களை ஆராய்ந்துகொண்டிருந்த பரமசிவம், திரும்பிய கோவிந்தனைக் கேட்டார், அருவருப்பாக, "ஏனப்பா? உனக்கும் பாக்கித் தரணுமா?''

"ஆமாங்க...''

"எவ்வளவு தரணும்?''

"ஆ அது கிடக்கு விடுங்க; பாவம் சம்பாதனை இல்லாத வீடு, என்ன செய்வாங்க? காலம் வந்தா கொடுக்கறாங்க...''

"எத்தனை நாளாச்சு?

அது ஆச்சுங்க மூணுமாசம். காய்கறி வாங்கின சில்லரைங்கதான், மொத்தமா சேர்ந்து போச்சு.''

"ஏன் கொடுத்தாய்? அவன் நிலை தெரியாதா உனக்கு!''

"ஏன் தெரியாம, தெரிஞ்சுதான் கொடுத்தேன்.''

திடுக்கிட்டுப் பார்த்த பரமசிவம், 'வருமா திரும்பி?' எனத் தலையை உருட்டினார் கேலியாக.

திரையை நீக்கிப் புதிரைக் காட்டிவிட்ட பெருமிதம் கூத்தாடிற்று அவர் விழிகளில்.

அவர் நையாண்டிக்கு அவன் அளித்த விடை!

"...அட வராட்டிப் போகுது போங்க. இந்த ஏழு ரூபாயிலே நான் என்ன மச்சு வீடாங்க கட்டிடப் போறேன்? என்னவோ மனுசனுக்கு மனுசன் நல்லது கெட்டதுலே உதவாட்டி என்னங்க? கண் முன்னாலே கஷ்டப்படுவதை எப்படிங்க பார்த்துச் சகிக்கிறது. பாவம் சிரமப்படறாரு ரொம்ப. இப்ப என் பணத்தைப் பத்தித்தானா கவலை. தராரு தன்னைப்போல. விட்டுத் தள்ளுங்க சாமி...

ஒவ்வொருத்தரு என்ன தானம் செய்யறாங்க, தருமம் பண்றாங்க! நாம்ப நம்மாலானது முன்னே கொடுத்து, பின்னே வாங்கக்கூடாதுங்களா? ஆ, என்னங்க...''

மின் அதிர்ச்சி! விதிர்த்து நிமிர்ந்தார் பரமசிவம். சொல்லா? சவுக்கடியா? கைவண்டி இழுத்து காய்கறி விற்றுப் பிழைப்பு நடத்துபவன், கேவலம் குடிசை வாழ் மனிதன், அவ்வெளியவனின் உள்ள விசாலம், இரக்க சிந்தை, பெருந்தன்மை மச்சுவீட்டுக்காரனான தனக்கு இல்லாமல் அல்லவா போய்விட்டது? மனைவி பேச்சைக் கேட்டு தூபம்போட்ட பிசாசு மாதிரியல்லவா ஆடிவிட்டேன் சிறுபொழுதுக்குள்!

உடன்பிறந்த என்னைவிட, அன்னியனான அவனுக்கு இத்தனைப் பரிவும், பற்றுதலும் எப்படி ஏற்பட்டது? உள்ளத்தால் உயர்ந்த மனிதனான கோவிந்தனின் உரம் பெற்ற உடலைக் காணவே கூசிய பரமசிவத்தின் சிரம், தானாகவே தாழ்ந்தது. மனிதத் தன்மைக்கு அஞ்சலி செலுத்துகிற மாதிரி, உள்மனம் கூவி இரைந்தது:

"யார் பெரிய மனிதன் சொல்லு? பணத்தால் பெருத்த நீயா? மனத்தால் பெருத்த அவனா?...என்று.'' பேசமாட்டாமல்நின்றார் பரமசிவம்.

❀

Regd. No. M. 7894

மேகலா
பிக்சர்ஸ்

கருணாநிதியின்

மறக்க முடியுமா?

தயாரிப்பு
டைரக்ஷன்
முரசொலி மாறன்

இசை:
மெல்லிசை மன்னர் ராமமூர்த்தி

ஒளிப்பதிவு:
அமிர்தம்

ஆகஸ்ட் 12உ முதல்
பாரகன்
மஹாராணி
சயானி

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பித் தெரு, உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.